விலை ரூபா 2-00

10 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 27 மாசி 20 ஐ-ஆகிர் 10 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (3—3—85) இதழ் 21

## அகதிகளுக்கு தமிழகத்தில் புதிய உணர்வு

[சென்னை]

தமக்கு இப்போதுதான் பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டுள்ளதாக தமிழ்நாடு வந்துசேர்ந்துள்ள இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் தகவலை அகதிகள் மறுவாழ்வு இயக்க ஆணையாளரும், செயலாளருமான திரு. யு. எஸ். நடராஜன் வெளியிட்டார். இலங்கை அகதிகளுக்கு புகைப் படம் கொண்ட அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ் அட்டையில் உங்களது குடும்பங்கள் பற்றிய முழுவிபரமும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தலைமையில் இலங்கை இனப்பிரச்னை புதிய கோணத்தில் ஆராய்வு

(கொழும்பு)

**நாளை முதற்தடவையாகக் கூடி இனப்பிரச்னை குறித்து ஆராயவுள்ள ஜனாதிபதி தலைமையிலான உபகுழு புதிய கோணத்தில் தீர்வுக்கான பரிகாரங்களை ஆலோசிக்குமென்று நம்பப்படுகிறது.**

அரசியல் ரீதியான தீர்வுதான் இனப்பிரச்னைக்கு வழி என்று இப்போது அமெரிக்காவும் தெரிவிப்பதால் இனப்பிரச்னையை தீர்ப்பதில்ராணுவ நடவடிக்கையில்லாத அரசியல் தீர்வுக்கு இவ் உபகுழு வழி கோலும் என்று அவதானிகள் நம்கின்றனர்.

இனப்பிரச்னை தொடர்பான ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை உபகுழு நாளை முதற்தடவையாகக் கூடுகிறது.

கடந்த மாதம் 19ம் திகதி அமைச்சரவையால் இக்குழு நியமிக்கப்பட்டது.

இனப்பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டிய அவசியம்பற்றிப் பல கோணங்களிலிருந்து வலியுறுத்தப்பட்டுள்ளதால், இக்கூட்டத்தில் நாளை முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படுகிறது.

## இலவச பாடப் புத்தகங்கள் அனுப்பிவைப்பதில் சிரமம்!

[கொழும்பு]

வடக்கு - கிழக்குப் பகுதிக்கு இலவசப் பாடப் புத்தகங்களை அனுப்பிவைப்பதில் பல சிரமங்கள் கல்விச் சேவைகள் அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

வாகனச் சாரதிகள் வடக்குக் கிழக்கிற்குச் செல்ல மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்தப் பிரச்னை ஏற்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இப்புத்தகங்களை அனுப்பிவைக்க மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

## கூட்டணியுடன் ரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை!

(கொழும்பு)

''அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் எந்தவித இரகசிய ஒப்பந்தமும் இல்லை'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மஹாபொல கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

த.வி.கூட்டணியுடன் அரசாங்கம் வெளிப்படையாகவே தொடர்பு கொண்டு வந்துள்ளது. சர்வகட்சி மாநாட்டில் நாம் முன்வைத்த யோசனைகளை அக்கட்சி நிராகரித்தது. அதே போன்று அக்கட்சி முன்வைத்த யோசனைகளை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

## இம்மாதம் முதல் வெளிமாவட்டத்திலிருந்து 412 பேருக்கு இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

சொந்த மாவட்டத்திற்கு வெளியில் பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாக அரசாங்க, தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இம் மாற்றம் இம்மாதம் முதல் அமுலுக்கு வரவிருப்பதாகவும் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஜி. ஜெயக்குமார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச்செயலாளர் த மகாசிவத்துக்கு அறிவித்துள்ளார்.

பத்தாண்டு சேவை அடிப்படையில் 412 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர் இவர்களில் சுமார் 340 ஆசிரியர்கள் பொதுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் என்றும் தெரிகிறது. (மா)

## மீண்டும் 'பூஸா' போன இளைஞர்

(யாழ்ப்பாணம்)

பூஸா முகாமிலிருந்து 51 தமிழ் இளைஞர்களும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை விடுதலை செய்யப்பட்ட போதிலும் யாழ்ப்பாணம் கொண்டு சேர்ப்பதற்கான போக்குவரத்து வசதியின்மை மீண்டும் முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனராம்.

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து வவனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையேயான பிரதான பாதை பாதிக்கப் பட்டிருந்தது.

மேலும் அரசாங்க அதிபர் திரு எம்.பஞ்சலிங்கம் விடுதலை செய்யப்பட்டுள்ளஇளைஞர்களை யாழ்ப்பாணம் கொண்டு வருதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## எம். ஜி. ஆர். கையளித்தார் மேலும் 7 அமைச்சர்கள்!

[சென்னை]

தமிழ்நாடு அமைச்சரவை மேலும் 7 புதிய அமைச்சர்களுடன் விரிவுபடுத்தப்படவுள்ளது.

முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் நேற்றுமுன்

(10ம் பக்கம் பார்க்க)

## அரசு அறிவிப்பு கிளிநொச்சியில் 40 வீரர்கள் பலியாகவில்லை!

[கொழும்பு]

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் தீவிரவாதிகளினால் தாக்கப்பட்டதில் 40 பொலிசாரும், இராணுவத்தினரும் கொலப்பட்டனரென்று வெளிவந்த செய்தியை அரசாங்கம் மறுத்துள்ளது.

சென்னையில் இயங்கும் ஈழம் மக்கள் தகவல் நிலையத்தின் செய்தியை ஆதாரமாகக் கொண்டு பி.ரி ஐ செய்தித் தாபனமும், ரோய்ட்டரும் மேற்படி செய்தியை வெளியிட்டிருந்தன.

ராஜாங்க அமைச்சு நேற்று இதுபற்றி வெளியிட்ட அறிக்கையில், கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையம்மீது மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதலைப் பொலிசாரும், இராணுவத்தினரும் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

(10-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் பாதுகாப்புத்தேடி ஓடிய மக்கள்!

[கிளிநொச்சி நிருபர் கே வி கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சி பொலிஸ் ராணுவ கூட்டு முகாம் மீது ஐந்துமணிநேர பயங்கரத் தாக்குதல் கடந்த வியாழக் கிழமை இரவு ஒருமணி 15 நிமிடம் முதல் மேற்கொள்ளப் பட்டது

பொலிஸ் ராணுவ தரப்பில் நால்வர் காயமடைந்ததாகத் தெரியவந்துள்ள அதேவேளை மரணமானோர் விபரம் தெரியவரவில்லை.

கிளிநொச்சி மக்கள் இரவோடிரவாக பாதுகாப்பைத் தேடி தூர இடங்களுக்கு ஓடினார்கள்.

சரமாரியான குண்டுத் தாக்குதலினால் ஓரளவே சேதம்

(10-ம் பக்கம் பார்க்க

## தார்ப்பீப்பாக்கள் எடுத்துச்சென்றனர்

[ஊர்காவற்றுறை]

யாழ் அபிவிருத்திச்சபை ஊர்காவற்றுறை உப அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நண்பகல் 1-30 மணியளவில் பல தாய்ப்பீப்பாக்கள் இனந்தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. இதுபற்றி யாழ் பொலிஸ் புகார் செய்யப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் பரீட்சை தொடர்ந்து நடக்கும்!

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் கல்விப்பொதுத்தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சை தொடர்ந்து நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகக் கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அம்மாவட்டத்தில் க. பொ. த. பரீட்சைக்குரிய பாடங்கள் 'வெள்ளி-சனி) இருநாட்களாக நடைபெறவில்லை என்றும் திரும்பவும் நடாத்த பரீட்சை ஆணையாளருடன் கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள பளை, பூநகரி, கிளிநொச்சி, முரசுமோட்டை, டி 7 ஆகிய பரீட்சை நிலையங்களுக்கு பரீட்சார்த்திகள் செய்வதற்கு பஸ் போக்குவசதிகள் வரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாப். மன்சூர் தெரிவித்துள்ளார். [மா]

## கொழும்பில் இருவர் பலி

[கொழும்பு]

மருதானையிலுள்ள கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் காவலுக்கு நின்ற பாதுகாப்பு ஊழியர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் ஒரு பாதுகாப்பு ஊழியரும் இன்னொரு நபரும் பலியாகினர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

## தமிழகத்தில் இலங்கை அகதிகள் நேற்றுவரை 12,400!

[சென்னை]

நானூறுக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் மேற்றும் ராமேஸ்வரம் வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

பெப்ரவரி 5ம்திகதியிலிருந்து நேற்றுவரை மொத்தமாக 12,400க்கும் அதிகமாக இலங்

[10ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை ..ர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்: விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

காரைநகர் வாரிவளவுப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 4 பரப்பில் புதுப்பிக்கப்பட்ட வீடு, மின்சாரம், கிணற்று வசதிகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2070, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2070

சாவகச்சேரி பஸ்நிலையத்திலிருந்து அரை மைல் தூரத்தில் சாவகச்சேரி கச்சாய் ரோட்டில் குருநாதசுவாமி கோயிலடியில் 4 பரப்புக்காணி வீடும் கிணற்றுடனும், 3 பரப்புக்காணி வீடும் கிணற்றுடனும் (மின்சார வசதி உண்டு) உடன் விற்பனைக்கு உண்டு. E C. K. லங்காஜி, 4-வது ஒழுங்கை, கச்சாய்வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 2075

ரோட்டுக்கரையில் திக்கம் மாலாண்டிச் சந்தைக்குச் சமீபமாக உறுதிப் பெலப்புள்ள பிச்சாவத்தை நிலப்பரப்பு 5½ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சி. விக்கினேஸ்வரன், 'வசந்தம்' வியாபாரி மூலை, பருத்தித்துறை. 2010

9 Sri தொடர்பிலக்க வோக்ஸ் வெகன் கார் (Volks Wagan) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- இல. 183, கொக்குவில் ஸ்ரேசன் ரோட், மருத்துவக் கல்லூரி முன்பாக திருநெல்வேலி, பொ. காங்கேயன், சட்டத்தரணி. 2072

T. V. டெக் அக்காய் ஓடியோ சிஸ்ரம், மக்ரோவேவ் அவண் கசற் றெக்கோடர் கென்வூட் CHEF GAS குக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 52, ஆடியபாதம் ரோட், நல்லூர் மாக்கற், கல்வியங்காடு. 2079

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் ராஜகாரியர் ஒழுங்கையில் 2 பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு திருமதி N. சபாரட்ணம், C/o இ. நடராஜா, ராஜகாரியர் வீதி, மானிப்பாய். 2030

மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் கோவில் கிழக்கு வீதியில் 4½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: முருகேசுப்பிள்ளை (ஆசிரியர்), மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். 2055

கட்டில்கள், கதிரைகள், கந்தோர் மேசை, சிசில் D 90 உறைகுளிர்ப்பெட்டி (Freezer) பழங்காலத்து தளபாடங்கள், கழுவல் தொட்டிகள் (Sinks), ஷவல்கள், ஆட்டுக்கல்லு, அம்மிகள், குளவிகள்' பெரிய போத்தல்கள். சாடிகள், Electric train Set 241, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, யாழ்ப்பாணம். 2086

## விற்பனைக்கு

ஸ்கூட்டர் 84ஸ்ரீலம்பிரட்டா சிசில் Sisil R 80 குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. 'ராஜகம்', சம்பியன் லேன், கொக்குவில். 2083

ஓட்டுமடச்சந்தியில் நான்கு கடைகள் உடனடியாக விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 63, புங்கன்குளம்வீதி, கொழும்புத்துறை. 2093

அராலி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் வீதியோரத்தில் 3½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். திருமதி ந, கனகம்மா அராலி மேற்கு வட்டுக்கோட்டை. 2096

இரண்டரைமாத உயர்இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் (பொலிஸ் இனம்) இரண்டு விற்பனைக்குண்டு. ஒன்று பெண். மற்றது ஆண். கவர்ச்சியான கறுப்பு நிறம், தொடர்ப; 83 A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2098

## தேவை

அரிசி ஆலையில் வேலைசெய்ய அனுபவமான சொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும். ரூபநிதி ஸ்ரோர்ஸ். 151. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2081

ஓமானில் தொலைபேசி தொழில் நுட்பவியலாளராயுள்ள 30 வயது நிரம்பியசெவ்வாய் தோஷமுள்ள இந்துஉயர்குல மணமகனுக்கு, ஏறத்தாள 25 வயதுடைய படித்த, அழகுள்ள மணமகள் தேவை. ஜாதகம், கல்வித்தகைமை, விரும்பின் படமுட்பட சகல விபரங்களும் அனுப்பவும். விளம்பர இல. 2082, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2082

புகையிரதநிலைய சந்தியில் (380 ஆஸ்பத்திரி வீதி) கடை ஒன்று சகலதளபாடங்களுடன் கொம்மிஷனுக்கு கொடுக்க உண்டு. தொடர்பு: (தபால் கந்தோர் முன்) 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2089

எமது பேக்கரிக்குப் பாண், பணிஸ், பிஸ்கட் தயாரிப்பதில் அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடனே நேரில் வரவும். ஹோட்டல் றெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2094

## தவறிவிட்டது

11-2-85 திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்குச் செல்லும் பஸ் வண்டியில் எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். சைமன் சரோசா, கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 2085

## தேவை

லொறிச் சாரதி, Dozer சாரதி, கட்டிட மேற்பார்வையாளர்கள், உழவுயந்திர உதிரிப்பாக வியாபார ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் உடன் தேவை. பெயர், விலாசம், வயது, முன் அனுபவ விபரம், எதிர்பார்க்கும் சம்பளம் அத்தாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், Engineering Contracts, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. 2051

யாழ், மாநகரசபை எல்லைக்குள் நல்ல தொழிலில் மாதம் 1600 ரூபாவிற்குமேல் சம்பளம் பெறும் 30 வயதுள்ள இந்து வேளாள விஞ்ஞானப் பட்டதாரிப் பெண்ணிற்கு பொருத்தமான படித்த மணமகன் தேவை. சீதனமாக யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல தளவாடங்களும் கொண்ட புதிய வீடும், நகையும் பணமாக ஒரு லட்சம் ரூபா மட்டிலும் கொடுக்கப்படும். எல்லா விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 2062, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2062

## காணவில்லை

கண்டியைச்சேர்ந்த பழைய உடுப்பு வியாபாரி முஹமட் சாஹீர் என்பவர் 26-2-85 முதல் வியாபாரத்திற்காகப் பருத்தித்துறைப்பகுதிக்குச் சென்றவரைக் காணவில்லை. இவர் பொது நிறமும் சுமார் 5 அடி உயரமும் தாடியும் உடையவர். வயது சுமார் 22. கடைசியாக வெளிர் நீல போடர் சேட்டும் சாரமும் அணிந்திருந்தார். இவரைக்கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். முஹமட் சாஹீர் மே/பா S. செல்வநாயகம் 80B பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 2097

## கேள்விப் பத்திரங்கள்

ஆஸ்பத்திரிக்கு பாண், விறகு போன்ற விநியோகத்தும் வாகன சேவைக்குமான கேள்விப்பத்திரங்கள் விற்பனைத் திணைக்களத்தால்கோரப்படுகின்றன. விபரங்களும், விண்ணப்பப் படிவங்களும் 19 3-85 மாலை 3 மணிவரை காரியாலயத்திலும், திணைக்கள ஆஸ்பத்திரி விநியோக கிளைகளிலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி: 20-3-85.

பிராந்திய கணக்காளர்,
விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

2092

## சிரமதான மூலம் திருத்தப்பட்டது

(சாவகச்சேரி)

கைதடி நுணாவிலுக்கும், நுணாவில் சந்திக்குமிடையில் உள்ள பிரதான வீதிக் (கண்டி வீதி) கிடங்குகள் நேற்றைய தினமிரவு சிரமதானம்மூலம் திருத்தப்பட்டது.






## டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் வைத்தியசாலை

மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.

மேற்படி வைத்திய நிலையத்தில் இம்மாதம் (1-3-1985) தொடக்கம் வழமைபோல் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றதென்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

டாக்டர். அல்போன்சஸ் அத்தனுசியார்

2084

## 31–வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி தீபரத்தினம் மயில்வாகனம் (தீபம்)



தோற்றம்
13-8-1910

மறைவு
2-2-1985

அன்பின் திருவுருவாய். பண்பின் சிகரமாய், அறிவின் சுடராய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசிய எங்கள் தாயே!

நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள், சகோதரி, மைத்துனர், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

''சிவசக்தி'',
ஆனைக்கோட்டை வடக்கு,
மானிப்பாய்.

2080

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி செல்லம்மா செல்லையா

மறைவு: 03-03-1983

''ஐயிரண்டு திங்களா
வங்கமெலா நொந்து
பெற்றுப்
பையலென்ற போதே
பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக்
கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற்
காண்போம் இனி''



அம்மா!

நாங்கள் மூவர் உங்கள் அன்புப் பிள்ளைகள். பேரர் பதினொருவரையும், பீட்டர் அறுவரையும் உங்கள் மடியிலே புரள வைத்து மகிழ்ந்தீர்களம்மா. குறை ஏதுமின்றி மகிழ்வோடு மண்ணில் வாழ்ந்த தாங்கள் ஏன் தான் எம்மைப் பிரிந்தீர்களம்மா? நெஞ்சைக் கல்லாக்கி, கருணையே வடிவான கருணாகரன் பாதமே கதியெனக் கொண்டீர்களம்மா.

நீங்கள் எம்மைப் பிரிந்து ஈராண்டுகளாகியும் எம்மிதயம் ஏங்கித் துடிக்குதம்மா.

அத்தமும் வாழ்வு மகத்துமட்
டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்
டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந்
தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப்
புண்ணிய பாவமுமே.

தங்கள் பிரிவாற்றாது கலங்கும்,

பிள்ளைகள், மருமக்கள், பேரர், பீட்டர், உங்கள் அன்புத் தம்பியின் குடும்பத்தார்.

03-03-1985

''கருணை வாசம்'',
சிவகுல வீதி
உரும்பராய்.

[2071]

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

# சாதாரணனையும் கவிதைச் சுவைஞனுக்கும் திரைக்கவி

**திரைக்காக எத்தனையோ கவிஞர்கள் அவ்வப்போது கவிதைகளை எழுதுகின்றார்கள். பலதரப்பட்ட சூழ்நிலைகளில் இக்கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகளில் ஒரு தொடர்பை ஏற்படுத்த முயன்றுள்ளார் இக் கட்டுரையாளர்.**

க. கணேசலிங்கம்

திரைக் கவிதைகளை எழுதும்போது கவிஞர்கள் ரசிகனையும் மனதில் நிறுத்தி எழுதுவதால், திரையில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவகையில் எழுதப்படும் பாடல்கள் இசைத்தட்டுக்களில் கேட்கும்போது அவை நமக்காகவே எழுதப்பட்டவைபோல் இருக்கின்றன.

நதியாகப் பாய்ந்தோடும் இசைவெள்ளத்தில் கவிஞனின் கவிதைகள் கலந்து ரசிகனைப் பரவசப்படுத்தும் அதேசமயத்தில் கவிதைகளில் பொதிந்து கிடக்கும் அருமையான பொருளையும் ரசிகனால் மெய்மறந்து அனுபவிக்கமுடிகின்றது.

''நான் பேச நினைப்பதெல்லாம்
நீபேச வேண்டும்
நாளோடும் பொழுதோடும்
உறவாட வேண்டும்''

கவிஞன் ரசிகனுடன் இவ்வாறு கவிதையில் பேச ஆரம்பிக்கின்றான்.

மனதோடு ஊஞ்சலாடும் எண்ணங்களை கவிதைகளாக்கி ரசிகனுக்குத் தருகின்றான் திரைக்கவிஞன்.

கவிதையால் என்ன செய்ய முடியும் என்பதற்கு கவிஞன் தரும் விளக்கம் இது:

''துன்பக் கடலைத் தாண்டும் போது
தோணியாவது கீதம்
அன்புக் குரலில் அமுதம் கலந்தே
அருந்தத்தருவது கீதம்
எங்கும் சிதறும் எண்ணங்களையும்
இழுத்து வருவது கீதம்
இணைந்து மகிழ்வதும் கீதம்
துயர் இருளை மறைப்பதும் கீதம்''

கவிதையின் நோக்கத்தை இதன்மூலம் ஓரளவு விளங்கிக் கொள்ளமுடிகிறது.

''பொங்கும் தமிழினில் கவிதைகள் புனைந்து கங்கைநதியென உறவினில் கலந்து-நீ என்னென்ன சொன்னாலும் கவிதை
நீ எங்கெங்கு தொட்டாலும் புதுமை''

ரசிகனுக்கு கவிஞன் கவிதையைக் கொடுப்பதில் இது ஒரு புதுவழி.

கவிதையில் கவிஞனும் ரசிகனும் உறவாடுகின்றார்கள்.

சாதாரண ரசிகனை சிறிது சிறிதாக ஒரு கவிதை ரசிகனாக மாற்றும் பணியை வெகு அழகாக திரைக்கவிஞன் மேற்கொள்கின்றான்.

## இயற்கை காட்சிகள்

அலைகள் தவழ்ந்து புரண்டோடும் நீலக்கடல, பாய்ந்தோடும் நதி, நீலவானம், வெண்முகில்கள், ஒளிர்விடும் தாரகைகள், தென்றலில் சதிராடும் பூங்கொடிகள், பொன்மாலைப் பொழுது இவ்வித அற்புதக் காட்சிகளை தனது இனிய கவிதைகளில் ஆயிரம் ஆயிரம் கற்பனைக் கலப்புகளுடன் எத்தனையோ உயிரோட்டமுள்ள உவமைகளுடன் அர்த்தம்ததும்ப அழகான கோணத்தில் காட்டி ரசிகனை மகிழ்விக்கின்றான் திரைக் கவிஞன்.

வானம்பாடிகள், பட்டுச்சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்குருவிகள், மாங்குயில்கள் ஆனந்த நடனமாடும் கோலமாமயில், மாடப்புறா, மைனா, பஞ்சவர்ணக்கிளிகள், அன்னம் - இப்படி எத்தனையோ வண்ண வண்ணப் பறவைகள் திரைக்கவிஞனின் கற்பனை வனத்தில் கவிதைகளாகப் பறந்து ரசிகனிடம் மெல்ல மெல்லப் பறந்துவரும்.

அன்று வந்ததும் ஒரே நிலா இன்று வந்ததும் அதே நிலா தான். ஆனால் இந்த நிலாவை எத்தனை விதத்தில் அழகுறக் கவிஞன் காட்டுகின்றான்.

பால்நிலா, பொன்நிலா, தங்கநிலா, வெண்ணிலா, வான்நிலா, வெள்ளி நிலா. புத்தம் புதுநிலா, குளிர்நிலா, அமுத நிலா, அழகைத் பொழியும் நிலா.

திரைக் கவிஞனின் கற்பனை வளர்த்த நிலாக்கள் தான் எத்தனை?

## பெண்மை

பெண் இனத்தைப்பற்றிப் பாடாத கவிஞர்களே கிடையாது எனலாம். திரைக்கவிஞன மட்டும் விட்டு விடுவானா என்ன?

''இனங்களிலே என்ன
இனம் பெண் இனம்? - மெய்
எழுத்துக்களிலேவரும் அந்த
மெல்லினம்''

பெண்மையின் மென்மையை மொழி அறிவோடு வெளிப்படுத்துகின்றான் திரைக்கவிஞன்.

''கட்டித்தங்கம் வெட்டி எடுத்து காதல் என்னும் சாறு பிழிந்து தட்டித்தட்டி சிற்பிகள் செய்த உருவமடா -
அவள் தளதள வென்று
ததும்பி நிற்கும் பருவமடா''

இவ்விதம் வர்ணிக்கும் கவிஞன்-

''காலங்களில் அவள்
வசந்தம்
கனிகளில் அவள் மாங்கனி''

என்று கூறி ''அவள் அருகினில் இருக்கையில் அமுதும் தேனும் எதற்கு?'' எனக்கேட்கின்றான்.

அவளது கண்களைப்பற்றி வர்ணிக்கையில் - மந்திரக்கண்ணாலே தந்திர வலைவீசும் கண்கள்' என்றும் காதல் நதியில் நீந்திடும் மீன்' என்றும் குறிப்பிடுகின்றான்.

ரசிகனுடன் பலவிதகதைகளை இரகசியமாகப்பேசிப் பகிர்ந்து மகிழும் கவிஞன் ''ஏதோ நினைவுகள் கனவுகள் மனதிலே மலருதே காற்றோடு காற்றாகவே' என்றும் 'என்ன தான் ரகசியமோ இதயத்திலே நினைத்தால் எனக்கே சிரிப்பு வரும் சமயத்திலே' என்றும் தனது மனநிலையை ரசிகனிடம் கூறுமற் கூறுகின்றான்.

## குழந்தைக்காக

சிலவேளைகளில் இவ்விதம் தனக்குள்ளேயே ஒன்றும் தெரியாது குழம்பித்தவிக்கும் குழந்தையாகி விடும் கவிஞன் திரையில் குழந்தைகளுக்காக அருமையான கவிதைகளைப் பாடுகின்றான்-

'பிள்ளைத்தமிழ் பாடுகிறேன்
- ஒரு
பிள்ளைக்காகப் பாடுகிறேன்'

''புத்தம் புதுமலரே குறுநகை புரியும் வெண்ணிலவே''

''கண்ணால் உன்னைக்
கண்டால் போதும்
கவலையெல்லாம் பறந்தே
போகும்''

இவையெல்லாம் திரைக்கவிஞர்கள் குழந்தைக்காகப் பாடிய கவிதைகள்.

இப்படிப்பட்ட குழந்தை அழுவதை கவிஞனால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?

''ஏனழுதாய் ஏனழுதாய்
என்னுயிரே ஏனழுதாய்''?

''ரோஜா மலரே அழுவக்
கூடாது
கண்ணீரு விணுவதா?''

அழவேண்டாமெனக் குழந்தையைக் கேட்கும் கவிஞன்-

''கண்ணே ராஜா கவலை
வேண்டாம்
அப்பா வருவார் தூங்கு
கண்மணி உன்னை அள்ளி
அணைப்பார் காரும் தருவார்
தூங்கு''

என்று சமாதானப்படுத்தி ஒருவாறு தூங்கவைக்கின்றான்.

தூங்கிப் பின் கண் விழிக்கும் குழந்தை எப்படியிருக்கின்றான்?

''வானம்பாடி கானம்
கேட்டே
வசந்தகாலத் தென்றல்
காற்றில்
தேன் மலர்கள் சிரிக்கும்
மாட்சி
செல்வன் துயில் நீங்கும்
காட்சி''

இதுதான் கவிஞன் காட்டும் காட்சி.

''நீ வளர்ந்து மரமாகி நிழல் தரும் காலம்வரை தாய் மனதைக்காத்திருப்பேன் தங்க மகனே''

பிள்ளை வளர்வதை எதிர்பார்த்து நிற்கும் கவிதை உள்ளம் இவ்வாறு பேசுகிறது.

வளர்ந்த பிள்ளைக்கு கவிஞர்கள் கூறும் சில அறிவுரைகள் நெஞ்சில் நிலைக்கத்தக்கவை!

''நல்ல நல்ல பிள்ளைகளை
நம்பி இந்த
நாடே இருக்குது தம்பி''

''ஆளும் வளரணும்
அறிவும் வளரணும்
அதுதானே வளர்த்தி''

''நரம்போடுதான்
பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி''

குழந்தைப்பருவத்தில் தாலாட்டுப்பாடித் தூங்க வைத்த கவிஞன் வளர்ந்தபின் தூங்கவிடாமல் எச்சரிக்கை செய்து தட்டி எழுப்பி விடுகின்றான்.

## வளர்ச்சி

''தூங்காதே தம்பி
தூங்காதே
சோம்பேறி என்ற
பெயர் வாங்காதே
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தாமும் கெட்டார்-சிலர் அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக் கொண்டார்''

இதுவே அவனைத் தூங்க விடாது எழுப்பியதற்கான காரணம்.

## உணர்ச்சிகள்

மனித வாழ்வில்தான் எத்தனை உணர்ச்சிகள் பாசம், நேசம், கோபம், இன்பக் காதல், சோகம், வீரம், நாணம், மானம் இப்படி எத்தனை எத்தனையோ உணர்ச்சிகள்.

இந்த உணர்ச்சிகளை அழகு நயத்துடன், சுவையோடு அனுபவக் கலப்போடு எடுத்துக் கவிதையாக்கிச் சொல்கின்றான் திரைக்கவிஞன்.

''காலடி ஓசையிலே-உன்
காதலை நானறிவேன்''

''உனைத்தேன் என
நான் நினைத்தேன்''

''ஓடும் தண்ணீரும்
நீ தொட்டால் பன்னீரு''

''எத்தனை முறை
பார்த்தாலும் சலிப்பதில்லை
இருவிழியே ஒரு கணமும்
மறப்பதில்லை-தமிழ்
எத்தனைமுறை கேட்டாலும்
சலிப்பதில்லை''

''கவிஞன் கண்டாலே
கவிதை''

என்பதும் அவனது வார்த்தைகளே.

## வீரம்

''வெண்ணிலாவும்
வானும் போல
வீரனும் போர்வாளும்போல
கண்ணும் ஒளியும்
போல எனது
கன்னல் தமிழும்
நானும் அல்லவோ''

திரைமூலமாகப் பிரபல்யமான கவிதை இது. பாரதிதாசனுடைய வீரக் கவிதை.

## நம்பிக்கை

''கவலைகள் கிடக்கட்டும்
மறந்துவிடு
காரியம் நடக்கட்டும்
துணிந்துவிடு''

இவ்விதம் நெஞ்சில் நம்பிக்கை வளர்வதற்கான கவிதைகளை தமிழ்த்திரையில் அதிகமாக நாம் கேட்கலாம்.

''வெய்யிற்கேற்ற
நிழலுண்டு
வீசும் தென்றற்
காற்றுண்டு''

''காலமகள் கண்திறப்பாள்
சின்னையா
நாம் கண்கலங்கி கவலைப்
பட்டு என்னையா?
நாலுபக்கம் வாசலுண்டு
சின்னையா-அதில்
நமக்கும் ஒரு வழி இல்லையா
சின்னையா?''

''காலம் ஒருநாள் மாறும்
—நம்
கவலைகள் யாவும் தீரும்''

வேளை பிறக்கும் என்று
நம்பிக்கை கொள்க—எந்த
வேதனையும் மாறும்
மேகத்தைப்போல''

''நாளைக்குத் தேசங்கள்
உன்னிடம்
நம்பிக்கை கொள்வது
அவசியம்''

இவையெல்லாம் ரசிகனின் நெஞ்சில் நம்பிக்கையை வளர்த்துவிட கவிஞன் ஆராய்ந்து சிந்தித்த நம்பிக்கை வரிகள்,

நம்பிக்கை பற்றிக் கூறியவன் இறைவன் பற்றி கூறும் பொழுது ''கோழிக்குள் முட்டை வைத்து முட்டைக்குள் கோழி வைத்து வாழைக்குள் கன்று வைத்தான் ஒருவன் - அதனைப்புரிந்துகொண்டால்அவன் தான் இறைவன்'' என்று இறைவனைப் புரிந்து கொள்ளவைப்பதற்கு முயற்சிக்கின்றான் திரைக்கவிஞன்

எத்தனையோ உணர்ச்சிகளை இனிமைக் கவிதைகளாக்கித் தந்த கவிஞன்-

''வாதம் செய்வது என்
கடமை - அதில்
வழியைக்காண்பது உன்
திறமை'' என்று ரசிகனிடமே முடிவைவிட்டு விடுகின்றான்.

---

# போனல் கிடையாது பொழுதுபட்டால் கிட்டாது

**தேர்** இருப்புக்கு எப்போதுவரும் என்று காத்திருப்பவருக்கு கொடியேற்ற விழா முடிவடையவில்லை என்பது ஏமாற்றம்.

ஆயிரக்கணக்கில் இலங்கை அகதிகள் ராமேஸ்வரம் செல்வது முடிவடையவில்லை. எனவே திருவிழாக்கள் எத்தனை என்ற விசனம் அதிகரித்திருக்கிறது.

இதற்கிடையில் கொழும்பு தினசரிகள்- மூக்கால் பங்கு அரச கட்டுப்பாட்டுக்குள் உள்ளவை- தேர்த் திருவிழா முடிவடையும் போது மிட்டாய்க்காரர் எழுப்பும் குரல் போன்ற கோஷம் எழுப்புகின்றன ஒரு கொழும்புத் தினசரி பாடுகேடாக அலறுகின்றது.

எவ்வித நாணமுமின்றி வெளிவெளியாகச் சொல்கிறது ''இதுதான் தருணம்; தமிழர்கள் இன்றைய ஐ. தே. கட்சியையும், அதன் தலைவரையும் தவறவிட்டால் நிலைமை மோசமாகும்,'' என்று வெருட்டுகிறது.

இந்திய பத்திரிகை கல்கத்தா ஸ்டேட்ஸ்மனை மேற்கோள்காட்டி உலகத்தலைவர்களில் ஒருவரான ஜனாதிபதி ஜெயவர்த்தன காலத்தில் இது தீர்க்கப்படவேண்டுமென்று வற்புறுத்துகிறது

இந்து பத்திரிகையின் ரெட்டியைத் திட்டுகிறது. மத்திய அரசின் பார்த்தசாரதி நிதானமற்றவர்; வேறு ஆளைப்பார்ப்போம் என்கிறது இன்று ராகதாளம் மாற்றிக்கொண்ட இன்னொரு தினசரி. தமிழ் வாசகர்களை மயக்கும் திறமற்ற பிரச்சாரம் இது கூர்ந்து கவனித்தால் தமிழர் இருள்நீங்க ஒளிதொலைவில் இல்லையெனத் தோன்றுகிறது.

---

# விருந்து!

மருந்தென்று போனேன்; மரத்தடி டாக்குத்தர்
விருந்தொன்று வைத்தார் விரைந்தேன்!— அருந்தென்று
கைநிறையத் தந்தார் கடவுளே நான் பார்த்தேன்
ஐயாறெற் றூசைக்கி வின்

—சத்தியசிலன்

## எமது சிறுகதை

# அவன் மாறி விட்டான்

சு. மதி

அன்றும் வழமை போல மூன்றரை மணி பஸ்ஸைப் பிடித்து விடவேண்டும் என்ற ஆதங்கத்துடன் ஆத்துப் பறந்து ஓடிவந்த சாந்தம் அவளுடைய நல்ல காலத்திற்கு பஸ்புறப்படாமல் நின்றபடியால் அவசரமாக ஓடிவந்து சன நெரிசல் மிக்க அந்த பஸ்ஸினுள் ஒருவாருகத் தொற்றிக் கொண்டாள். சனம் என்ருல் சொல்லக்கூடிய சனம் இல்ல மூச்சுக்கூட விட முடியாத அளவிற்கு ஆட்கள் நெருக்கி அடித்துக் கொண்டு நின்றிருந்தார்கள். கண்டக்டரோ ஆட்களை இன்னும் ஏற்றுவதற்காக உள்ளுக்குள் இருப்பவர்களைப் பார்த்து "என்னப்பா, பின்னுக்குப் போங்கோவன் உள்ளுக்கை நல்ல இடம் கிடக்கு நீங்கள் மட்டும் போனுச் சரியே" கோபத்தோடு கூறினுர் என்பதை விட கோபத்தோடு கத்தினுர் என்பது தான் சாலப் பொருந்தும்.

சாந்தமும் தனது சொந்த அனுபவத்தால் வெளியில் நிற்பவர்களின் நிலைமையைப் புரிந்து கொண்டவளாக உள்ளே நிற்பவர்கள் பின்னுக்குப்போகும் நோக்கமின்றி அசையாமல் நின்ருலும் கூட தான் மட்டும் அவர்களுக்கூடாக ஒருவாறு நுழைந்து நுழைந்து பின்னே போய் நின்று கொண்டாள் கண்டக்டர் சொன்னது போல் அங்கே முன்னே இருந்ததைவிடக் கொஞ்சமாவது நெரிபடாமல் நிற்கக் கூடியதாகத்தான் இருந்தது. அப்போது தான் அவள் கொஞ்சம் ஆறுதலாக மூச்சுவிட்டுக் கொண்டாள்.

கிடைக்கிற பிச்சைச் சம்பளத்திற்காக இப்போதைய நிலைமைகளையும் பொருட்படுத்தாமல் இந்த நெரிசலுக்குள் ஒவ்வொரு நாளும் நெரிபட்டு வேலைக்குப் போய்வரவேண்டிய நிர்ப்பந்தத்தை ஒரு கணம் மனதில் எண்ணி நொந்து கொண்டவள் இந்தக் காசால் வீட்டுக்குப்பெரிதாகக் கொடுக்க முடியாவிட்டாலும் கூட தன்னுடைய சுமையையாவது பெற்ருேருக்கு இல்லாமல் செய்கிருேமே என்ற எண்ணத்தால் தன்னைத்தானே தேற்றியும் கொண்டாள்.

பஸ் புறப்படத் தொடங்கும் போதுதான் அவள் கவனித்தாள் அந்த அவன் இன்னும் ஏதோ விதமாக தன்னருகில் வந்து நின்று கொண்டிருப்பதை அவனை வெறுப்புடன் ஒரு பார்வை பார்த்து விட்டு அந்த தலை இடி இன்றைக்கும் தானு' என்று மனதில் எண்ணிக்கொண்டாள். ஆனுல் அவனோ அவளது அந்தப் பார்வையையே இலட்சியம் செய்யாது அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்து ஒரு வித இளக்காரப் புன்னகை செய்து கொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்ல சன நெரிசலை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவளை உரசியபடி வந்து நின்று கொண்டான். அவளுக்கோ அங்கு இங்கு விலக முடியாத நிலை. அவனது முழங்கை விஷமத்தனமாக தன்மேல் உராய்வது அவளுக்குப் புரிந்தது. இதற்கு முன்பும் இரு தடவைகள் இதே அனுபவத்தை இவன் மூலமே பெற்றுக் கொண்டவள் அவள். தான் அவன் மேல் படாமல் இருப்பதற்காக எவ்வளவிற்கு விலகி நிற்க முடியுமோ அவ்வளவிற்கு நாரியை வளைத்து முதுகை நெளித்து அந்தக் கம்பியோடு நெரிந்தபடி அவள் நின்று கொண்டிருந்தாள்.



அவளுக்கோ நாரி முதுகெல்லாம் வலி கண்டது. அங்குள்ளவர்களில் யாராவது தான் படும் அவஸ்தையைக் கண்டு அவனைத் திட்டமாட்டார்களா அந்த வேதனையிலிருந்து தன்னை விடுவித்து விட மாட்டார்களா என்று ஆவலோடு ஒரு தரம் மற்றவர்களைப் பார்த்துக் கொண்டாள். யாருமே அவளைக் கவனிப்பதாக இல்லை. அவளுக்கு ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் அழுகை முட்டிக் கொண்டு வந்துவிடும் போல் இருந்தது. இடைக்கிடை அந்த அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டாள். அவனே அதை லட்சியமே செய்யாமல் நின்ருன். அவனைப் பார்த்து வாய்க்கு வந்தபடி திட்டத்தான் சாந்தத்திற்கு வாய் உன்னியது ஆனுல் வார்த்தைகள் தான் வெளியே வர மறுத்தன.

"ஒட்டுமடம் இறக்கமிருக்கே" கண்டக்டரின் குரலை அடுத்து "ஓமோம்" என்றபடி அப்போதுதான் கனவு கண்டு விழித்தவர்கள் போல இருவர் பின் சீற்றிலிருந்து எழுந்து மற்றவர்களின் கால்களை மிதித்தடித்துக் கொண்டும் அதற்குப் பதிலாக திட்டுகளை வாங்கிக் கொண்டும் இறங்குவதற்காக விழுந்தடித்துக் கொண்டு சென்ருர்கள்.

"ஒட்டுமடக் காறரெல்லாம் ஏன் போய் பின்னுக்கு நிக்கிறனீங்கள் பிறகாவது வந்து வேலைக்கு முன்னுலை நிப்பம் எண்டு யோசிக்கிறியளே கெதியாய் இறங்குங்கோ"

எரிந்து விழுந்தார் கண்டக்டர் அந்த நேரத்திற்குள் சாந்தமும் இன்னொரு பெண்ணும் அந்த இடத்தில் இருந்து விட்டனர். அந்த அவனின் முகத்தில் மெல்லியதாக அசடு வழிந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் 'ஸ்மாட்டாக' நின்று கொண்டான். சாந்தத்திற்கோ உயிர்போகும் தறுவாயிலிருந்து தப்பினுற் கூட ஏற்படாத அளவிற்கு சந்தோஷம் இப்போது.

"பஸ்ஸிலை வாறதெண்டா எத்தனை உபத்திரவங்களைத் தாங்க வேண்டியிருக்கு" அவள் மனம் இவ்வாறு எண்ணிக் கொண்டபோது மெல்லியதாக ஒரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.

வேலைத் தலத்தில் மற்றப் பெண்கள் தாங்கள் பட்ட அனுபவங்களைக் கதைகதையாகக் கூற இவள் கேட்டிருக்கிருள். சிலசமயம் மதியானம் சாப்பிடும் நேரம் இதுதான் அவர்களது முக்கிய கதையாக இருக்கும். ஒருத்தி சொல்வாள் "அண்டைக்கொரு நாள் இப்படித்தான், நான் உடனே இடத்தை விட்டு எழும்பியிற்றன்" என்று. இன்னொருத்தி தான் ஒருமுறை அறம்பிறமாக பேசியதைச் சொல்வாள். அந்த அனுபவமே இல்லாத ஒருத்தி "நான் என்ருல்கன்னத்தைப் பொத்தி வெளுத்திருப்பன்" என்ருள். அந்த நேரத்தில் சாந்தா சொல்வாள்" ஐயோ எனக் கொண்டால் அப்பிடி எல்லாம் செய்ய வராது" என்று. என்றைக்காவது ஒருநாள் தானும் இவர்கள் கூறுவது போல் செய்யவேண்டும் என்று எண்ணிக்கொள்வாள். ஆனுல் இதுவரை அவ்வாறு அவளால் நடந்துகொள்ளவில்லை.

பஸ் ட்றைவர் எதிரே இருந்து வந்த ஒரு மினிபஸ் ட்றைவருடன் பஸ்ஸை நிறுத்திவிட்டுக் கதைத்துக் கொண்டிருந்தார் கண்டக்டரும் மெல்ல அவர்களுடன் சேர்ந்து கொண்டார். பிரயாணிகளோ அவர்களையே ஆவலுடன் பார்த்தபடி அவர்களது கதையைக்கேட்பதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தனர்.

"ஆமிக்காறர் வழியிலை செக் பண்ணுகினையாம், பத்துப்பதினைஞ்சு பெடியங்களையும் பிடிச்சு வைச்சிருக்கினையாம், அதுதான் மினிபஸ்காரர் சொல்லிப் போட்டுப் போகினம்"

கண்டக்டர் சொன்ன தகவல் இது. உடனே 'கசமுச' என்று எல்லோரும் கதைக்கத் தொடங்கிவிட்டனர். சிலர் தங்கள் அடையாள அட்டைகளை எடுத்துப்பார்த்து விட்டுத் திரும்பவும் கவனமாக வைத்தார்கள். அடையாள அட்டை இல்லாத சிலர் 'தறபுற' வென விழித்தபடி கொணடு வராததன் காரணங்களை மற்றவர்களுக்குக் கூறி தங்கள் மனப்பயத்திற்கு ஆறுதல் தேட முயற்சித்துக்கொண்டிருந்தார்கள்.

சாந்தத்திடம் அடையாள அட்டை இருந்தபோதிலும் ஏதோ ஒரு நெஞ்சிடி. நெஞ்சு 'படபட' என அடிக்கத் தொடங்கியிருந்தது. இப்போதுதான் ஒரு கண்டத்திலிருந்து தப்பி அதே கண்டம் வேறொரு உருவில் வரக்கூடும் என்று உள்ளூரப் பயந்து கொண்டு இருந்தாள். மற்றவர்கள் ஒவ்வொருவரினதும் முகபாவங்களைக் கவனித்த அவள் அந்த அவனையும் கவனிக்கத் தவறவில்லை, அவன் முளித்தபடி பரிதாபமாக ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவளுக்குச் சிரிப்பதா வேண்டாமா எனத் தெரியவில்லை. அவன் அவளையும் ஒரு தரம் கலவரத்துடன் நோக்கிவிட்டு மறுபுறம் திரும்பிக் கொண்டாள்.

பஸ்சினுள்கதைத்துக்கொண்டிருந்த ஒருவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல் அங்கிருந்த இளைஞர்களைப்பார்த்து "தம்பியவை மெல்லப்போய் பின்னால் நில்லுங்கோ என்றவர் கண்டக்டரைப் பார்த்து "என்ன தம்பி நீர் சொல்லுறீர்" என்ருர். "ஓமோம்" என்று கடன் வழிக்கு சொன்ன கண்டக்டர் "இந்தப் பெடியளாலை எங்களுக்குப் பெரிய கரைச்சல்" என்று வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டார். அதற்குமேல் அந்தப் பெரியவர் கண்டக்டரோடு ஒன்றுமே பேசாமல் சீற்றிலிருந்த ஒரு பெண்ணைப் பார்த்து

"நீங்கள் கொஞ்சம் இந்தத் தம்பியையும் இருக்க விடுங்கோ' பாவம் பிள்ளைகள், ஏதோ நல்லகாலத்துக்கு அவை கவனிக்காட்டி நல்லது தானே' என்ருர் அருகில் நின்ற ஒரு வாலிபனைக்காட்டி

அந்த அவனோ வேர்க்க விறுவிறுக்க மற்றவர்களை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டு நின்ருன். அந்த நிலையில் அவனைக்காணும்போது சாந்தத்திற்குப் பரிதாபமாக இருந்தது. தனக்கருகில் அமர்ந்திருந்து பெண்ணை நோக்கி சற்று தள்ளி இருக்கும்படி கூறி விட்டுத் தானும் தள்ளி இருந்து கொண்டவள் அவனை நோக்கி அவர்களுக்கிடையில் இருந்த இடத்தில் அமரச் சொன்னுள், அவனுக்கோ இருப்பதாவேண்டாமா என்று புரியவில்லை. வெட்கம் பிடுங்கித்தின்ன "சீ பறவாயில்லை" என்ருன் தயக்கத்தோடு.

"இல்லை நீங்கள் 'செக்' பண்ணிற இடம் முடியும் மட்டுமாவது இருங்கோ" என்ருள்.

சாந்தமும் அருகில் இருந்தவளும் முன்புறமாக நகர்ந்து இருக்க அந்த அவன் அவர்களுக்கிடையில் இருந்த சொற்ப இடத்தில் தனதுடம்பைச் செருகிக்கொண்டான். சாந்தம் வெளியிலிருப்பவர்கள் அவனைக் கவனியாவண்ணம் தன்னுலியன்றவரை அவனை மறைக்க முயற்சித்தாள். சாந்தம் ஒரு தடவை அவனைத் திருப்பிப்பார்த்தாள். அவளை நன்றிப்பெருக்கோடு நோக்கிய அவன் மேலும் அவளைப்பார்க்கத் தைரியம் இல்லாதவனுகத் தலையைக் குனிந்து கொண்டான். இப்போது அவன் தனது கைகள் அவள் மேல் படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக இருகைகளை ஒன்ருகக் கூட்டி நீட்டி முழங்கால்களுக்கு மேல் வைத்திருந்தான். இதைப் பார்த்ததும் சாந்தத்திற்கு அவன் மேல் பச்சாத்தாபமே ஏற்பட்டது. இனி ஒருபோதும் தன்னுடன் நடந்துகொண்டதுபோல எவருடனும் அவன் நடந்து கொள்ளமாட்டான் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டது.

"அண்ணை இனி வெளிக்கிடுவமன்" என்ற கண்டக்டரின் வார்த்தையை ஆமோதிப்பதுபோல தலையசைத்த ட்றைவர் பஸ்ஸைக் கிளப்ப பஸ் மெதுவாகப் புறப்படத் தொடங்கியது.

(யாவும் கற்பனை)

---

## இணைப்புகள் பொருந்தா தாயின்....?

எது எது இணைந்தால் நன்று?
எது எது இணைந்தால் தீது?
இது பற்றிச் சொன்னுல் நன்று
என்பதால் சொல்வேன் இங்கு.

அன்புள்ளான் பொருளைச் சேர்த்தால்
இன்பமே உலகை ஆளும்!
அன்பிலான் பொருளைச் சேர்த்தால்
துன்பமே உலகைச் சூழும்!!

பண்பிலான் பலத்தைப் பெற்ருல்
துன்பமும் துயரும் ஓங்கும?
பண்புள்ளான் பலமும் பெற்ருல்
நீதியே எங்கும் ஓங்கும்!!

அறிவுள்ளான் கையில் கத்தி
இருப்பதால் அச்சம் இல்லை!
அறிவில்லான் கையில் கத்தி
இருந்திடின் மிச்சம் இல்லை!!

உழைப்புடன் இயற்கை கூடின்
அளப்பிலாச் செல்வம் சேரும்!
உழைப்புடன் இயற்கை சீறின்
களைப்புத்தான் மிகுதியாகும்!!

பாலுடன் தேனும் சேர்த்துப்
பருகினுல் சுகம் உண்டாகும்!
பாலுடன் விஷமும் சேர்த்தால்
வரும் பயன் அறிவீர்தானே!!

இணைப்புகள் பொருந்தி வந்தால்
விளைவெலாம் நன்மையாகும்!
இணைப்புகள் பொருந்தாதாயின்
விளைவெலாம் துன்பம்தானே!!

"முருகு"

---

ஆசையோடும் பொறுமையோடும் அழகான கூட்டைக்கட்டும் பட்டுப்பூச்சி தன்னை அதற்குள் சிறைப்படுத்தி வெளிவர வழியில்லாது மடிந்து போகிறது. மனிதனும் இவ்வாறுதான் உலகிற்குரிய பொருள்பற்றுதலினுல் தன்னைச்சுற்றி ஓர் அழகிய சிறையை ஆசையுடன் உருவாக்கி அதில் அடைந்துகொள்ளுகிறுன். அதற்கு வெளியில் உள்ள கொள்ளை அழகு அவனுக்குப் புலனுவதே இல்லை.

ஸ்ரீராமகிருஷ்ணர்

# தொடர் நவீனம்

மன்னார்குடி சின்னஞ்சிறிய மாவட்டம்- பக்கத்து மாவட்டத்தோடு இணைந்து இருந்த மன்னார்குடி அரசியற்பின்னணியில் தனிமையாக்கப்பட்டது. தனி மாவட்டமாய் உருவெடுத்ததும், அதற்கு ஒரு முழு அளவிலான அலுவலகம், ஊழியர் விடுதிகள், புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் என்று கொஞ்சநாட்கள் ஒரே அமர்க்களம்!

இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுடன் கலாவும்சேர்ந்து கொண்டாள்.

புதுமுகங்களும், தெரிந்த பழைய முகங்களுமாய் ஒரே கலவையாய் இருந்தன. கலாவுக்கு மேலதிகாரியாக ஒரு பறங்கி இனத்தைச் சேர்ந்தவர், கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்று வந்து பதவி ஏற்றார். அவரின் பெயரை உச்சரிப்பதே கஷ்டமாய் இருந்தது.

அவருடைய தரத்தைச் சேர்ந்த வேறு மேலதிளாரிகள் அவரை டிக்கி, டிக்கி எனச் செல்லமாய் அழைத்தது வேடிக்கையாய் இருந்தது கலாவுக்கு.

அவர் வந்ததும். அலுவலக பிரதான இலிகிதர் கலாவை அழைத்துச்சென்று அறிமுகம் செய்து வைத்தார்.

''ஓ...!சார்மிங்கேர்ள்...!'' -கலாவின் கையைப் பிடித்துக் குலுக்கியவர், சற்று நேரம் விடவே இல்லை அறிமுகம் செய்து வைத்துவிட்டுப் பிரதான இலிகிதர் வெளியே சென்றுவிட்டார். கதிரையில் அமர்ந்தாள் கலா. அவளைப் பற்றிய சேவை விபரங்களை வெகு அக்கறையுடன் அவர் விசாரித்தார்.

''வெறி நைஸ்... வெறி குட்...''-இப்படி இடைக்கிடை கூறி இரு தோள்களையும் குலுக்கிக் கொண்டார் டிக்கி. அடிக்கடி சிரித்துக்கொண்டார். ''உம்மைப்போல் இளமையான ஆட்கள்தான் எனக்குப் பிடிக்கும் நீர் டிஓ ஆக வந்தது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.'' இதைக் கேட்டதும் கலா தலைகால் தெரியாமல் மகிழ்ச்சியில் மூழ்கினாள். தன்னுடையஇளமை, அழகு என்பவற்றை யாராவது சிலாகித்துப் பேசினால் எல்லாவற்றையும் மறந்து விடுபவள் கலா.

''இப்போதைக்கு நானும் நீரும்தான் இங்கு. வேலை கொஞ்சம் தானே... உம்முடைய ஒத்துழைப்பு இருந்தால் நான் யாவற்றையும் கச்சிதமாய் முடித்து விடுவேன்.''- தோள்களைக் குலுக்கி விட்டுச் சிரித்தார் அவர்.

''என்னுடைய ஒத்துழைப்பு எப்பவும் இருக்கும் சேர்...''

புன்முறுவலுடன் பதிலிறுத்தாள் கலா.

''ஓ வெறிகுட் வெறிகுட்! எனக்கு அவ்வளவும்போதும்'' என்றபடி தன் கதிரையை விட்டு எழுந்து கலாவின் பக்கத்தில் வந்தார் 'டிக்கி'.

கலாவும் தன் இருக்கையை விட்டு எழுந்துகொண்டாள்.

''என்ன மாதிரியான ஆட்களோடு வேலை செய்ய வேண்டியிருக்குமோ என்று பயந்து பயந்து வந்த எனக்கு, கலகலப்பான உம்மைக் கண்டதும் பெரிய சந்தோஷம்...! சரி போய்வாரும்...!''- கலாவின் தோளில் கையை வைத்து, தட்டிக்கொடுத்து விடை கொடுத்தார் அவர்.

கலா கூச்சப்படவில்லை.

வேலைகள் பழகியதாகவே இருந்தபடியால் புதிய இடத்தில் கலாவுக்கு ஒரு சிரமமும்




இருக்கவில்லை. அலுவலகவேலைகளில் அவள் காட்டிய அக்கறையும் திறமையும் பலரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. அவளுடைய மேலதிகாரி ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து முறை என்றாலும் தமது அறைக்குஅழைக்காமல் இருக்க மாட்டார்.

''கலா, என்னை மன்னிக்க வேணும். ஐ ஆம் ஏ செயின் ஸ்மோக்கர்'' - சொல்லிக் கொண்டே சிகரெட்டை எடுத்து வாயில் வைப்பார் 'டிக்கி'. ஒரு நாளைக்கு ஐந்து பெட்டி சிகரெட்டாவது ஊதித் தள்ளுவார்.

அலுவலகச் சிப்பந்தி அலோசியஸ் ஒவ்வொரு அரைமணித்தியாலத்துக்கொரு முறை, கோப்பையில் பால் கலவாத தேநீர்கொண்டுவந்து கொடுக்க வேண்டும். அந்தத் தேநீரும், சிகரெட்டும் இருந்தால், அந்த அதிகாரியின் முகம் மலர்ந்திருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மதிய நேரங்களில், சில சமயம் அளவாக மது அருந்திவிட்டு வருவார். அப்படியான நேரங்களில் அவருடைய உற்சாகம் 'பிய்த்துக்கொண்டு போகும்'.

கலாதான் அவருடைய பிரத்தியேக அலுவலராகவும் இருந்தாள். கேட்கவா வேண்டும்!

அவள் முன்பு பிரேமகாந்தனுடன் வேலைபார்த்தபொழுது எழுந்த வம்பர்சபைக்கதைகள் போன்று இங்கும்இருக்கத்தான் செய்தது. ஆனால் அவள் அவைகளைப் பற்றிக் கவலைப்படும் ஜீவன் அல்லவே.

கட்டிய கணவன் தன்னை விட்டுப் பிரிந்திருக்கின்றானே, அவன் எப்படி வாழ்கின்றானோ என்று என்றாவது அவள் சிந்தித்துப் பார்த்ததே கிடையாது ஒன்றாக வாழ்ந்த காலத்தில் அவனைப் பற்றிக் கவலைப்படாதவள் இப்பொழுதா கவலைப்படப்போகின்றாள்!

கலாவைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு அவளின் தற்போதைய வாழ்க்கை தெரியாமலில்லை. ஆனால் வாளாவெட்டியாகத்தான் இருப்பதைப் பற்றிப் பிறர்என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தாலும் அதைப்பற்றி அணுவளவேனும் கவலைப்படவில்லை கலா.

வெள்ளிக்கிழமைகளில் நண்பகல் உணவை முடித்துக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டுவிடுவாள் குடியிருப்புக்கு மன்னார்குடியிலிருந்து வருவ தென்றல், பஸ் ஏறி, பூஞ்சோலைத்துறையில் இறங்கி, கடல் ஏரியைப் படகு மூலம் கடந்து அடுத்த பஸ் எடுக்க வேண்டும். பூஞ்சோலைப் படகுத்துறை வரை கலா அநேகமாக அலுவலக ஜீப்பில் வந்துவிடுவாள். ஏதாவது ஒரு இன்ஸ்பெக்ஷன் வேலைக்காக ஜீப்வண்டி அன்று ஒதுக்கப்படும்.

''கலா உமக்கு இந்த விஷயத்தில் பூரண சுதந்திரம் தந்திருக்கிறன்...வெட்கப்படாமல் என்ன உதவியானாலும் நீர் என்னிடம் கேட்டுக்கொள்ளலாம். அதுமட்டுமல்ல இந்தச் சலுகை உமக்கு ஒரு ஆளுக்குத்தான். என்ன புரியுதா நான் சொல்வது ? கண்களைச் சிமிட்டிக்கொண்டே ஏடி கேட்டார்.

அவள் ஏடி தந்த சலுகைகளை வெகு முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டாள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். என்றபழமொழியின் அர்த்தம் தனது செயல்களால் மருகுபெறுவதை நினைத்து தன்னுள் சிரித்துக்கொள்ளுவாள் கலா.

மன்னார்குடிக்கு வேலைமாறி வந்து நாலுமாதங்களாகி விட்டன. கலாவுக்கு தான் முன்பு பணியாற்றிய இடத்தையும் பழகிய ஆட்களையும் காண வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அக்காரணத்தை விட வேறொன்றும் முக்கியமாக இருந்தது. கடந்த வாரம் பிரேமகாந்தன் இரண்டுமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடன்வந்து தன்னைச் சந்திக்குமாறு சொல்லியிருந்தான்.

பழைய இடத்தில் மனத்துக்கு நிறைவான வரவேற்பு அவளுக்குக் காத்திருந்தது. மிஸிஸ் சிவசம்பு ஓடிவந்து கலாவைக் கட்டிக்கொண்டாள்.

''என்னடி கலா, உடம்பு நல்லாய் பெருத்திருக்கு! அப்படி என்னடி சந்தோஷம்..?

''ராஜேஸ் உனக்கு எப்பவும் என்னுடைய உடம்பைப் பற்றித்தான் நினைப்பு. எப்பவும் நான் சந்தோஷமாய்த்தான் இருக்கிறன் நீ நினைக்கிற மாதிரி விசேஷமாய் ஒன்றுமில்லை...''- கலா சிரித்தபடியே கூறி மிஸிஸ் சிவசம்புவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள்,

''நீஒரு தனி ரகமடி''—

மிஸிஸ் சிவசம்பு சொல்லிவிட்டு கலாவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள். அலுவலகத்தில் கலா எல்லோருடனும் கலகலப்பாக உரையாடினாள். எஸ் ஏ என்பவர் அதே பழைய முறைப்புப் பார்வையுடனும், பியோன் கோபாலு அதே பழைய வக்கிரப்பார்வையுடனும் கலாவையே பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் கலா அந்த இருவரையும் கவனிக்கவேயில்லை. நேராகபிரேமகாந்தனின் அறைக்குச் சென்றாள்.

''குட் மோர்னிங் சேர்''

ஆள் அரவம்கேட்டு நிமிர்ந்த பிரேமகாந்தன் மௌனமாக கலாவை எதிர்நோக்கினான். வழமையாகத் தன்னைக்கண்டால் அட்டகாசமாய்வரவேற்கும் பிரமேகாந்தன் அன்று பேசாமல் மௌனமாய் இருந்தது கலாவுக்கு என்னவோ போலிருந்தது. அதுமட்டுமல்ல கடந்த நாலுமாதங்களாக அவன் அவளைச் சந்திக்காததால் இன்று தன்னைக்கண்டவுடன் ஆவல் பொங்க வரவேற்பான் என்ற ஒரு எண்ணத்தை மனதில் பரவவிட்டவாறே அவனுடைய அறையினுள் நுழைந்த அவளுக்குப் பிரேமகாந்தனின் மௌனம் புதிராயிருந்தது.

''குட்மோர்னிங் சேர்'' மறுபடியும் கலா.

''உம்......'' தலையாட்டினான் பிரேமகாந்தன்.

''அந்தக்கதிரையில இரும்''—வார்த்தைகள் சூடாகவெளி வந்தன.

கலா அமர்ந்துகொண்டாள்.

''ஏன் சேர் ரெலிபோன்பண்ணினீர்கள்?''

''ஏனோ...? அதுசரி மன்னார்குடி சீவியம் எப்படி இருக்குது?'' கலாவுக்கு அவனின் முகமும் கேள்விகளும் வியப்பை அளித்தன.

''பரவாயில்லை சேர்...''

அப்ப மன்னார்குடி மனத்துக்குப் பிடிச்சிருக்குப் போலை... அப்படித்தானே?''

''.......''

''என்ன பேசாமல் இருக்கிறீர்.....போனகிழமைகொழும்புக்குப் போனனீரோ...?''

''ஓம் சேர்''

''உம்மோடு கூட வந்தது யார்?''

''நான் தனியத்தான் சேர்''

''அந்தப் பறங்கி வரவில்லையே?''

''இல்லை.. இல்லை சேர்''

''கலா பொய் பேசாதேயும் எனக்கு எல்லாம் தெரியும் ''

''சேர்...''

கலாவுக்குக் குப்பென்று முகமெல்லாம் வியர்த்தது.

''வாயை மூடு. நீ ஒரு சரியான ...'' அந்த பறங்கிப் பயலோடு கொழும்புக்கு பேர்த் புக் பண்ணி ட்ரெயினில போன கதை எனக்குத் தெரியாதென்று நினைக்கிறியா நீ நம்பிக்கைத் துரோகம் செய்துபோட்டாய்.''

—பிரேமகாந்தனின் சிவந்த முகம் கோபத்தால் மேலும் சிவப்பாகியது. வார்த்தைகள் சூடாக ஏகவசனத்தில் வெளி வந்ததைக் கலா எதிர்பார்க்கவில்லை.

## 15

''நீ ஒரு ...'' என்ற வார்த்தை பலமுறை காதில் ஒலித்தது. பிரேமகாந்தனின் முகத்தைப் பார்க்கத் திராணியற்று கீழே குனிந்தாள் அவள். பெரிய விம்மல் ஒன்று வெடித்தது.

கலா அழுகிறாள்!

பிரேமகாந்தன் தன்னை அப்படிப் பேசியதை கலாவினால் பொறுக்க முடியாமற் போயிற்று. முன்பு தன்னைப் பற்றி மொட்டைக் கடிதம் வந்ததும் அதைப் பார்த்து விட்டு யாரோ ஒரு விசரன் எழுதினான் என்றுகூறி சிரித்துவிட்டுத் தன்னைத் தேற்றிய கணவன் சிவராசாவின் பெருந்தன்மை எங்கே...இங்கு பிறன்மனைவி ஒருத்தியுடன் தான் மட்டும்தான் உறவாடலாம், மற்றவர்கள் உறவாடக் கூடாது என்று தனக்குப் பட்டமும்சூட்டிய பிரேமகாந்தன் எங்கேஎன்றெண்ணினாள் அவள். ஒரே ஒரு கணம் சிவராசனின் பெருந்தன்மையை நினைத்ததும் கலாவின் உள்ளம் இளகியது. ஆனால் மறுகணம் அது இறுகிவிட்டது. தன் கணவனின் நல்ல உள்ளத்தை நினைத்து அழுதாளோ அல்லது தன்னைப் பிரேமகாந்தன் ஏசிப் போட்டானே என்று அழுதாளோ அது அவளுக்கே வெளிச்சம்!

கலாவின் அழுகை ஓயுமட்டும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் பிரேமகாந்தன்.

''சரி சரி எழும்பி முகத்தைக் கழுவும்'' அவனுடைய குரலில் கோபம் தணியவில்லை. கலா மௌனமாய் எழுந்து. அவனுடைய இருக்கைக்குப் பின்புறம்அமைந்திருந்த 'வாஷ் பேசினில்' முகத்தை அழுத்திக் கழுவினாள். முகத்தை மட்டுமே அவளால் கழுவ முடிந்தது. மனத்தை...?

குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதும் அவளின் உற்சாகம் மறுபடியும் உயிர்த்தது. 'ஹான்ட் பேக்கை'த் திறந்தாள். அலங்காரம் முடிந்து. மறுபடியும் பிரேமகாந்தனின் முன்வந்து அமர்ந்தாள்.

அவளில் ஒரு பழக்கம் நெற்றியில் எப்பொழுதும் பெரிய குங்குமப்பொட்டு வைத்துக் கொள்ளுவாள் இப்பொழுதும் வாசனைப் பவுடரின் சுகந்தம் அறையெங்கும் பரவ அகலமான குங்குமப்பொட்டு பளபளக்க அமர்ந்திருக்கின்றாள்.

பிரேமகாந்தன் நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய முகமும் மலர்ந்தது.

''நைஸ்!''

கலா சிரித்துக்கொண்டாள்.

'போவமா?' — கேட்டுக்கொண்டே பிரேமகாந்தன் இருக்கையைவிட்டெழுந்தான். கலாவும் மௌனமாக எழுந்தாள்.

மிஸிஸ் சிவசம்பு கண்ணைச் சிமிட்டியவாறு உதட்டோரப் புன்னகையுடன் கலாவுக்கு விடைகொடுத்தாள். அவர்கள் போவதையேபார்த்துக்கொண்டிருந்தனர் மற்றவர்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

## அப்பா சொன்ன உண்மை – கதை

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானிகள் இடிமின்னல் ஆகியவற்றின் சக்தியினைப்பற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதன்பயனாக மின்னலின் தாக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற மின்னல் கடத்திக் கம்பங்களை அறிமுகம் செய்ததுடன் செம்பு (Copper) உலோகத்தினை இதற்கு உபயோகிக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்து ஆலயங்களில் ஆயினும் சரி. கத்தோலிக்க கோவில்களிலும் சரி, பௌத்த விகாரைகளிலும் சரி, பள்ளிவாசல்களாயினும் சரி கொடியேற்றியே திருவிழாக்கள் நிகழ்கின்றன. மக்கள் திருவிழாவின்போது பல இடங்களிலிருந்தும் வந்துசேர்வர். கோவில்கள் பெரும்பாலும் கடற்கரைகளிலும் வயல் வெளிகளிலும் அமைந்ததால் மக்களை இடி, மின்னல்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க நினைத்த எமது மூத்ததலைமுறையினர் கொடியேற்றியே திருவிழா செய்யுமாறும் அறிவுறுத்தினர். கொடிக்கம்பம் செம்பு, உலோகத்தால் செய்யப்பட்டிருப்பதை நாம் இங்கே ஞாபகத்தில் கொள்ளல் அவசியம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மின்னலின் தாக்கத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றிய எமது மூத்தலைமுறையினர் தலைசிறந்த விஞ்ஞானிகளே! இல்லையா?

ஜனனி. சபா. புஷ்பநாதன்

# கதிர்காமம் கந்தன் கோயில் அன்றும் - இன்றும்

வி. சுந்தரலிங்கம்

[2]

### கந்தபுராணத்தில் கதிர்காமம்

கந்தபுராணம் ஒரு மகா காவியம்; கந்தனின் வீரதீர பராக்கிரமச் செயல்களை விப ரிக்கும் பாரம்பரிய சரித்திர ஏடு.

மூலப் புராணம் கி.மு ஐந்தாம் நூற்றுண்டில் எழுதப் பட்டதாகக் கருதப்படுகிறது. கச்சியப்பசிவாச்சாரியார் தமிழில் அருளிய கந்தபுராணம் கி.பி எட்டாம் நூற்றுண்டில் தோன்றியதாகும். வருடாவருடம் சைவாலயங்களில் தமிழன்பர்கள் அறிந்து கொள்வதற்காக கந்தப்புராணத்தின் சிற்சில பகுதிகள் வாசித்து பயன் சொல்லப்படுவதை இன்றும் காணலாம்.

அநாதரட்சகனை கந்தன் தன் அடியாரின் குறை நீக்க போர்க்களத்திற்கு புறப்பட முன்னர் செய்யப்பட்ட ஆயத்தங்கள், அநுஷ்டித்த விரதங்கள் ஆகியவைபற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளன. கந்தன் சென்ற மார்க்கம், தென் பாரதத்திலுள்ள 'தாம்பிரபிரணி' என்ற பிரதேசத்திலிருந்து இலங்கை சென்ற அவன் திருத்தூதர் வீரவாகுதேவர் போன பெரும் இன்னல்களுக்குள்ளாகி மாபெரும் தியாகங்களைச் செய்துள்ளார்கள் என்பது கண்கூடு ஒவ்வொரு சமயத்தை சார்ந்தவர்கள் தத்தம் சமயத்தின் யதார்த்தத்தைக் கருத்திற் கொள்ளாது சமயத் தலைவருக்கு தெய்வீக சக்திகளையும் அர்த்தங்களையும் கற்பித்து அவரைத் தெய்வமாக்கி விடுகின்றனர். இதுவே கந்தபுராணத்தின் கதை மாவீரன் ஒருவன் தெய்வமாகிய பாரம் பரியக் கதை

### வேதிகித்திகந்தமலை

செங்குத்தான வேதிகித்தி கந்தமலை (சுவாமிமலை) மீது மூச்சுவாங்க ஏறும் அடியார் கூட்டத்தின் ''அரோகரா'' (சிவசிவ) சப்தத்தை குன்றங்களே எதிரொலிக்கும். கதிர்காமக்கந்தனின் பிரதான ஆலயத்தில் தினமும் பூசையின் பின் கற்பூர ஆராத்தி நடந்ததும் 'பஞ்சாலாத்தி' கோயிலுக்கு வெளியே எடுத்துச் சென்று வேதிகித்திகந்த குன்றின் உச்சியில் வீற்றிருக்கும் தெய்வத்திற்கு குன்றேயான தெய்வத்திற்கு காட்டப்படும். மலையேறி வணங்க முடியாத வயோதிபர்களும் அங்கவீனர்களும் சுலபமாக வணங்குவதற்கே பிரதான கோயில் அருகில் அமைக்கப்பட்டது.

## 'வேதிகித்திகந்த'(சுவாமிமலை) குன்றிலுள்ள'வேல்', கந்தன் போரில் பிரயோகித்ததென்பது ஒரு கர்ண பரம்பரைக்கதை

வழியாகும். ஏழுமலைச் சாரலை அடைந்ததும் படையொன்று திரட்டி பயிற்சி அளிக்கப்பட்டது. மத்தியஸ்தானமாகிய வேதிகித்திகந்த (சுவாமிமலை) என்னுமிடத்தில் யாகமண்டபம் அமைத்து வேதியர் வேதமோதி யாகம் செய்தனர் 21 தினங்கள் இடைவிடாது இரவு பகலாக நடந்த இந்த யாகத்தில் வேதியர்கள் சாரிசாரியாக வேதமோதினர். யாகம் முடிந்ததும் அடியார் துயர்களை போர்வேலன் யுத்த சந்நதம் கொண்டான்.

### கந்தஷஷ்டி விரதம்

இன்று கூட இந்த யாகத்தை மிகவும் பக்திசிரத்தையுடன் மக்கள் அனுஷ்டிக்கின்றனர். எடுத்த கருமத்தை இறைவய அருள்பாலித்து வழிநடத்தவேண்டுமென்பதாலேதே கந்தசஷ்டி விரதம் ஏற்பட்டது. இப் புராணக் கதைகள் ஒருபுறமிருக்க:-

துன்பப்படுவோரின் துயர் துடைக்க வீறு கொண்டெழுந்து போர் புரிந்த ஒரு மகா புருஷரின் வீரவரலாறே இக் காவியமாகும். தொடுத்த போரில் வெற்றியீட்டும் வரை ஒரு வீரன் வீரனாகவே கணிக்கப்படுகிறான். வெற்றியின் பின்னரே 'தெய்வாம்சம்' பெற்ற ஆற்றல் மிகுந்த சமயமொன்றின் கர்த்தா ஆகின்றான்.

உலகிலுள்ள சமயங்களை ஆராயும் போது எல்லா சமயஸ்தாபகர்களும், தலைவர்களும் தனிப்பட்டமுறையிலோ அல்லது பொதுவாகவோ

குன்றின் உச்சியிலுள்ள ஒரு மாடத்தில் வேல் ஒன்றுண்டு. இதே வேலைத்தான் வேற்படைக் கந்தன் போரில் பிரயோகித்ததாக கர்ண பரம்பரைக் கதையுண்டு.

கந்தபுராணப் படலமொன்றில் விசும்பாருக இலங்கையைச் சேர்ந்த பகுதியுண்டு. இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் கந்த வழிபாடு தோன்றியதை இது குறிக்கிறது. முத்துக்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் வேறொரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. ஆனால் இது கந்தபுராணத்தில் இல்லை. தென்கிழக்கேயுள்ள கதிர்காமத்திலிருந்து வடமேற்கிலுள்ள கீரிமலைவரை கந்தவழிபாடு வியாபித்திருக்கிறது.

### சூரசங்காரம்

கந்தபுராணத்தின் சில சுவாரஸ்யமான பகுதிகளின் இரத்தினச்சுருக்கமானவர்ணனை; பனி மண்டலம் மூடிய மலையைச் சுற்றிநின்ற சேனைகள் பலவித பாணங்களை விடுத்தும், அஸ்திரங்களைத் தொடுத்தும் கடுஞ் சமர் புரிந்தனர் அம்புகளின் சரக்கூட்டத்தினுல் வானமண்டலமே தெரியவில்லை கண்டதுண்டமாக வெட்டுண்ட உடல்கள்! சிதறிய சிரங்கள்! ரத்தம் ஆருய்ப்பெருகி கடலில் சங்கமித்து கடலே ரத்தமாயிற்று. சூரபத்தமனின் சேனை நிர்மூலமாக்கப்பட்டது சூரபத்மனைக் கந்தன் இரு கூறுகளாகப் பிளந்தான். அவற்றில் ஒன்று மயிலாகவும், மற்றென்று சேவலாகவும் வடிவெடுத்து நின்றன சூரசங்காரத்தால் ஏற்பட்ட உயிரழிவுக்கு பிராயச்சித்தமாகமயிலை வாகனமாகவும், கோழியை சேவல் கொடியாகவும் கந்தன் ஏற்றுக்கொண்டு சூரபத்மனுக்குக் கருணை செய்தான் என்று புராணம் கூறுகிறது.

சூரசங்காரத்தை வெகுவிமரிசையாக கந்தசுவாமிகோயில்களில் வருடந்தோறும் இன்றும் கொண்டாடுகிறார்கள்.

(தொடரும்)

---

## நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—10

# கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம்

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் தேதி எங்களுக்கொரு முக்கியமான நாள். தமிழை ஒதுக்கி இந்த மசோதாவை இச்சபையிற் கொண்டு வந்து நிறைவேற்றினால் அது ஒற்றையாட்சிக்குச் சாவுமணியடிப்பதாயிருக்கும் என்பதை நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன். அதுமட்டுமல்ல, இந்த மசோதா நிறைவேறினால் எங்களுக்கு ஒருதனி அரசு— அது சுதந்திரமுள்ள தனி அரசா, அல்லது சமஷ்டியுள்ள— சமஷ்டிக்குட்பட்ட — தமிழரசா என்பது இனிமேல் வருகின்ற காரியங்கள் பலவற்றைப் பொறுத்திருக்கும். ஆனால்தனியரசு ஒன்று வருவதற்கு உத்தரவாதமிட்டதே இந்தச் சட்டம் என்பதை நான் கூறுகின்றேன்''

'கோப்பாய் கோமான்' என்று ஈழத் தமிழர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட அமரர் கு. வன்னியசிங்கம் 1956 ம்ஆண்டு ஜூன் மாதம் 13ந் தேதி பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இன்றுள்ள நிலையில் கோப்பாய்க் கோமானின் வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்தி நினைவில் நிறைந்த அரசியலார் சிலர் வரிசையில் அவரைப் பற்றி எழுதுவது மிகப் பொருத்தமென்றே கருதலாம்:

ஈழத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்கள் யாவும் பெரும்பாலும் வாதாட்டங்களாகவே இருந்து வந்துள்ளன. அன்றைய சூழ்நிலையில் வாதாட்டங்களினால் பெற்ற வெற்றிகள் பல!

சேர் பொன். இராமநாதன் இங்கிலாந்து சென்று வாதாடித்தான் வெற்றியீட்டினார்! அன்று அவர் சத்தியாக்கிரகம் செய்யவோ, ஆயுதம் ஏந்திப் போராடவோ வேண்டிய அவசியம் இருக்கவில்லை!

வாதாட்டத்தின் மூலம் போராடி நமது உரிமைகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை ஈழத்தமிழ்த் தலைவர்களிடம் இருந்து வந்தது!

வாதாட்டத்தினால் இனியும் நமது உரிமைகளைப் பெறமுடியாது களத்திலிறங்கிப் போராடினால்தான் வெற்றிபெறமுடியுமென்ற முடிவுக்குஈழத் தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

இந்த நிலையில்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சிஉருவானது. ஆனால் அதன் முதல் கட்டம் கட்சிப் போராட்டமாகவே அமைந்தது. பின்னர்தான் அதுமக்கள் போராட்டமாக மாறியது.

இலங்கையின் வரலாற்றில் உரிமைப் போராட்டமொன்றை அகிம்சைப் போராட்டமாக அரசியல் ரீதியில் ஆரம்பித்த பெருமை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியையே சாரும். இதில் திரு கு. வன்னியசிங்கத்துக்கு முக்கிய பங்கு உண்டு.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய திரு எஸ். ஜே வி செல்வநாயகம், திரு கு வன்னியசிங்கம், டாக்டர் இ மு வி நாகநாதன் ஆகியோர் 'இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியொன்றை 1949-ஆம் ஆண்டளவில் ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் தமது கட்சியை வளர்த்துக் கொள்வதில் பல சவால்களையும் சமாளித்து சோதனைகளைத் தாண்டிய தமிழ் அரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களை வடக்கிலும் கிழக்கிலும் ஒரே அணியில் திரட்டி ஒற்றுமைப் படுத்துவதில் வெற்றி கண்டது

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உருவான பின் 1952-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கில் கோப்பாய்த் தொகுதியில் திரு கு.வன்னியசிங்கமும் கிழக்கில் திருக்கோணமலையில் திரு. என். ஆர். ராஜவரோதயமுமே வெற்றியீட்டினர்.

திரு. வன்னியசிங்கம் 1947-ஆம் ஆண்டில்அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகக் கோப்பாயில் அறிமுகப் படுத்தப்பட்டவர். அன்று முதல் அவர் இறக்கும் வரை கோப்பாய்த் தொகுதிக்குப் பிரதிநிதித்துவம் வகித்து வந்தார்.

சிறந்த வழக்கறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்த திரு வன்னியசிங்கம் மேடைப் பேச்சில் ஒரு புதிய உத்தியைக் கையாண்டு மக்கள் மத்தியில் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டவர். மேடையில் அவர் அதிகமாகஅலட்டிக்கொள்ள மாட்டார். ஆனால் அவரது பேச்சு கிண்டலும் குத்தலும் நிறைந்ததாக இருக்கும். தமிழரசுக் கட்சிக்கூட்டங்களில் அக்காலத்தில் கூட்ட முடிவில் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படும் என்று அறிவித்து விடுவார்கள் கேள்விகள் சீட்டுக்களில் எழுதி மேடைக்கு அனுப்பப்படும் கூட்ட முடிவில் இக்கேள்விகளுக்கு திரு. வன்னியசிங்கமே பதிலளிப்பார் இவரது பதில்களில் கிண்டலும் குத்தலுமே நிறைந்திருக்கும் 'இப்பதில்களைக்கேட்பதற்காகவே சனக்கூட்டம் கூட்டம் முடியும் வரை காத்து நிற்கும்.

சமஷ்டிக் கோரிக்கையை வைத்துப் பிரசாரம் செய்து வந்த இலங்கைத்தமிழரசுக் கட்சிக்கு 1956-ஆம் ஆண்டுத் தேர்தலில் திரு பண்டாரநாயகாவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் சேர் ஜோன் கொத்தலாவல தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியும் ''சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி'' என்ற கோரிக்கையை முன்வைத்தது பெரும் வாய்ப்பாக அமைந்தது.

இதர கட்சிகள் தமிழுக்கும் சம அந்தஸ்து என்ற கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது சம அந்தஸ்து மட்டும் தமிழர் பிரச்னைக்குத் தீர்வாகாது; சம அந்தஸ்துடன் தமிழருக்கு ஒரு தமிழ் அரசும் வேண்டும் என்று தமிழ் அரசுக்கட்சி பிரசாரம் செய்ததுடன் இதற்காகப் போராட்டம் நடத்துவோம் என்றும் உறுதியளித்தது.

இதன்பயனாக 1956-ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும் பாலானதொகுதிகளில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வெற்றிபெற்றது.

### எஸ். எம். ஜி.

1956-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆந் தேதி பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவை' பிரதமர் திரு. எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயா சமர்ப்பிப்பார் என்ற அறிவிப்பைத்தொடர்ந்து தமிழரசுக்கட்சி அதை எதிர்த்துபாராளுமன்றத்துக்கு முன்னே சத்தியாக்கிரகம் செய்வதென்று தீர்மானித்தது.

இத்தீர்மானத்தை மேற்கொண்டதில் திரு வன்னியசிங்கம் முக்கிய பங்கு வகித்தார்.

இதேபோல் காலிமுகமைதானத்தில் நடந்த சத்தியாக்கிரகத்தில் காடையர்களினால் சத்தியாக்கிரகிகள் மிருகத்தனமாகத் தகக்கப்பட்டபோது அதிகம் தாக்குதலுக்குள்ளானவரும் திருவன்னிய சிங்கமே!

சிங்களம் மட்டும் மசோதாவை காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்து அமைதி வழியில் எதிர்ப்புப் போராட்டம் நடத்திய தமிழ் அரசுக்கட்சியினர் மசோதா சட்டமானபின் தொடர்ந்தும் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பதற்கு முடிவு செய்திருந்தது.

சிங்களம் மட்டும் சட்டத்துக்குப் பெரும் எதிர்ப்பு நடவடிக்கை எடுப்பதற்குத்தீர்மானிப்பதற்காக 1957-ஆம் ஆண்டில் திருக்கோணமலையில் கட்சியின் ஆண்டுமாநாட்டை நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது இந்த மாநாட்டுக்குமுன் பிரசித்திபெற்ற திருமலையாத்திரை நடைபெற்றது.

(அடுத்த வாரம்)

---

## நாளை - அன்பு செலுத்தவே

இரவின் தனிமைக்குப் பண்பாட உருகி ஓடும் அருவியைப் போல உள்ளம் அமையும் படியும்,

அளவுக்கு மீறிய கருணையினால் எழும் நெஞ்சத்தின் துன்பத்தை அறியவும்,

அன்பை நீங்கள் நன்காராய்ந்து அறிவதால், நீங்கள் பண்பெய்தவும்,

முழு மனத்தோடும் மகிழ்வோடும் நீங்கள் உங்கள் இரத்தத்தைச் சிந்தவும்,

பறந்து செல்லும் இறக்கைகளையுடைய இதயத்தோடு, ஒவ்வொரு நாள் விடியலிலும் எழுந்து, நாம் அன்பு செலுத்துவதற்காக மற்றொரு நாளை அளித்தமைக்கு இறைவனுக்கு வணக்கஞ் செலுத்தவும்,

நடுப்பகல் நேரத்திலே ஓய்வெடுத்து அன்பின் பரவசத்தை ஆழ்ந்து சிந்திக்கவும்,

நன்றியுணர்வுடன் மாலைக் காலத்திலே, இல்லம் திரும்பவும்,

பின்னர் உங்களது உள்ளங்களிலே உள்ள அன்பின் வடிவங்களுக்கு வாழ்த்துக் கூறி, புகழ் பாடவுமான இவையே உங்கள் ஆசைகளாக விளங்கட்டும்.

கலீல் கிப்ரான்.

# சிவகுமாரன் கதைகள்

ஆசிரியர்; கே. எஸ். சிவகுமாரன்

வெளியீடு: ஜீவா பதிப்பகம் தேற்றாத் தீவு; களுவாஞ்சிக்குடி

பாரதி நூற்றாண்டு வெளியீடாக வந்திருக்கும் இச்சிறுகதைத் தொகுதியில் ஏழு சிறுகதைகள் இருக்கின்றன. சிறுகதைகளை எழுதிய ஆசிரியர் கே. எஸ். சிவகுமாரனை இன்றைய தலைமுறை தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த விமர்சகராகவே அறிவார்கள். ஆனால் அவர் 1959 லிருந்து 1965 வரை பல சிறுகதைகளையும் எழுதியிருப்பது பலருக்குத் தெரியாத விஷயம். ஈழத்துப் பத்திரிகைகள் பலவற்றில் அவ்வப்போது எழுதிய கதைகள் உறைவிடம், தாழ்வு மனப்பான்மை, இனம் இனத்துடன், அவர்கள் உலகம், பகட்டு, இழை, குறிஞ்சிக் காதல் என்பன இந்நூலில் காணப்படுகின்றன.

## உறைவிடம்

உறைவிடம் என்ற கதை முழுவதும் மனோதத்துவத்தை நமக்கு உணர்த்தி நிற்கிறது. மனநோயாளிக்கும், மனநோய் டாக்டரான பெண்ணுக்குமிடையில் நடக்கும் சம்பாஷணையாக இக்கதை இருந்தாலும் ஒரு டாக்டர் தன்கடமையைச் செய்யும் போது நோயாளி என்ன செய்தாலும் அதனைப்பொறுத்துக் கொண்டு அவனுக்கு ஆகவேண்டியதைக் கவனிக்க வேண்டுமென்பதை இக்கதை தெட்டத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. அந்த வாலிபன் மனநோயாளி எனத் தன்னை எண்ணி பெண் டாக்டரிடம் சென்றவன் அவர் கையைப் பற்றுகிறான். இதமாக அந்த டாக்டரின் வதனத்தை வருடி மகிழ்கிறான். இத்தனைக்கும் அந்தப் பெண் டாக்டர் லேசாக முறுவலித்து நிற்கிறாள். இதுதான் கதை. அவன் அவளைத் தொட்டு விட்டதனால் அந்தக் குடும்பப் பெண்ணான டாக்டர் கற்பிழிந்தவளாகக் கருதப்பட மாட்டாள் என்பது கதை சொல்லும் உண்மை.

இக்கதை நெஞ்சை நெகிழ வைக்கிறது கடமையில் கண்ணும் கருத்துமாக உழைப்பவர் எதையும் தாங்கும் இதயத்துடன் இருக்க வேண்டும் என்பது கதையின் படிப்பினையாக இருக்கின்றது.

## தாழ்வு மனப்பான்மை

தாழ்வு மனப்பான்மை என்பது ஒரு நல்ல நளினமான சிறு கதை. சிறுவயதில் பழகிய இருவர் வளர்ந்து பெரியவர்களானதும் எப்படித் தூரநிற்கிறார்கள் பெண்மை எப்படிப் பரிணமிக்கின்றது. பின்னர் திருமணம் செய்யுமாறு கேட்டபோது அத்தான் திருமணம் செய்ய மறுக்கிறான். டாக்டரான அத்தான் தற்பெருமையில் மணக்காது கர்வமாக இருக்கிறான் என அவள் கற்பனை செய்கிறாள் ஆனால் அவன் திருமணம் செய்யாமல் இருக்க முடிவு செய்த காரணத்தை கதை முடிவில் படித்துணரும் போது அவனின் முடிவு சரிதான் என்று நாமும் தலையசைக்கிறோம். பாலுறவுக் கதையாக ஆரம்பித்துப் பரிவுக் கதையாக இக்கதை முடிகிறது. இனம் இனத்துடன் என்ற கதை வெறும் சம்பாஷணைக் கதை தான். பிறஇனத்தை வெறுக்கும் ஒருவன் தன் இனத்தவளைக் கண்டதும் அவளுடன் ஆர்வமாகப் பேசி மகிழ்கிறான். அவ்வளவு தான் கதை.

## அவர்கள் உலகம்

அவர்கள் உலகம் பல்கலைக்களக மாணவர் எழுத்தாளர் ஒருவர் முன்னிலையிலேயே அவர் காது கேட்க அந்த எழுத்தாளர் எனது அயலவர்

### புதிய புத்தகம்

எனக்குத் தெரிந்தவர் என்று அரட்டை அடித்துப் பொழுது போக்குவது தான் சிலமாணவரின் மனோநிலை என்பதை இக்கதை எடுத்துக் காட்டுகின்றது.

## பகட்டு

பகட்டு தமிழ் இளைஞனுக்கும் சிங்கள யுவதிக்குமிடைமிடையில் நடக்கும் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டி சினிமா இதழ் ஒன்றிற்கு அவள் போஸ் கொடுக்க வேண்டுமென இதழாசிரியர் கருணாரத்தின கேட்டபோது எரிமலையாகிறாள். அவளின் பகட்டு எப்படி இருந்த போதிலும் இதற்கு அவள் இசையாது பெண்மையின் தன்மையை எடுத்துக் காட்டுகிறாள் இக்கதையின் மூலம் இழை இது ஒரு புதுமையான கதை. கதையும் கதை சொல்லப்படும் உத்தியும் மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றன. தாம்பத்திய வாழ்வில்குழந்தைகள் பிறக்கிறார்கள் அவள் வேலை செய்யும் காரியாலயத்தில் சில சம்பவங்கள் நடக்கின்றன. அதனால் சம்பள உயர்வு கிடைக்கின்றது. ஆனாலும் அவள் தன்கற்பை இழக்கவில்லை. தன் கணவனிடம் காட்டும் இழையான அன்பில் அவள் கட்டுண்டு மகிழ்கிறாள்.

## குறிஞ்சிக்காதல்

குறிஞ்சிக் காதல் மலையகத்தில் இக்கதை ஆரம்பிக்கின்றது. தமிழ் இலக்கியத்தில் தலைவன் தலைவி தோழி என்

### புத்தொளி

பவர்களின் நிகழ்வு ஒன்றைக் கதையாகக் காட்டுகிறார் கதாசிரியர் தலைவனும் தலைவியும் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்துத் தோழி விலகி விடுகிறாள்.

தலைசிறந்த ஈழத்து விமர்சகராக இருக்கும் கே. எஸ். சிவகுமாரன் எழுதிய கதைகள் சிவகுமாரனின் இளமைப் பருவத்தை எண்ணிப்பார்க்க வைக்கின்றது. கதைகளில் சிக்கலோ, சிதறலோ இல்லாமல் தெளிவான நீரோடையாகக் கதைசொல்லப்படுகின்றது. வாசகர்களுக்கு இச்சிறுகதைகள் நல்ல பொழுது போக்குக் கதைகளாக அமைகின்றன.

ஏழுசிறுகதைகளும் அழகிய அட்டைப்படத்துடன் வெள்ளைத் தாளில் அச்சேற்றப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் சிறுகதையில் ஏற்பட்ட அச்சுப்பிழைகளுக்கு இருபக்கங்களில் திருத்தம் சொல்லப்படுகின்றது சிறுகதை நூலுக்குப் பிழை திருத்தம் எழுதுவதை விட அவை ஏற்படாமல் கவனிப்பது மிக முக்கியமானதாகும்.

இந் நூலில் தமிழக விமர்சகர் வல்லிக்கண்ணனின் விமர்சனமும் இடம்பெற்றிருப்பதுடன் தினகரன் பிரதம ஆசிரியர் திரு இ சிவகுருநாதன் அணிந்துரையும் அளித்திருக்கின்றார்.

''இவரது இந்நூல் இவருக்கே உரித்தான விமர்சனத்துறையைச் சேர்ந்ததல்லவெனினும் விமர்சகன் எழுதும் சிறுகதை நூலென்ற வகையில் எல்லோராலும் கவனிக்கப்படும் ஒரு முயற்சி என்பதனால் இம்முன்னுரை எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்கிறார் திரு.சிவகுருநாதன்.

# 101-வது மாத ஒலிபரப்புப்பணியில் வெரித்தாஸ்

# வெரித்தாஸ்என்றால் உண்மை என்று அர்த்தம்!

தமிழ் கூறும் நல்லுலகிற்கு கிடைத்த தமிழ் ஒலிபரப்புக்களில் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணியும் ஒன்றாகும். வெரித்தாஸ் வானொலியின் தமிழ் ஒலிபரப்பு தினமும் காலையும் மாலையும் தமிழ் மக்களை அன்போடும்! பண்போடும் நாடி வருகின்றது வெரித்தாஸ் வானொலியின் தமிழ் ஒலிபரப்பாளர்கள் நால்வர். அவர்களுள் பிரதான ஒலிபரப்பாளர்கள் திரு எம். ஆரோக்கிய சுவாமி ஆவார் மற்றையோர் எம்.ஏ ரவி, புஸ்ஷோருராணி, மாக்கிரெட்சிலினி ஆவர்.

இவ் ஒலிபரப்பு பற்றி திரு. ஆரோக்கிய சுவாமியுடன் தொடர்பு கொண்டபோது 'வெரித்தாஸ்' என்றால் 'உண்மை'; உண்மை என்றால் 'வெரித்தாஸ்' என்று கூறினார் ஆம் தினமும் இப் பரந்துபட்ட உலகில் நடக்கும் சகல செய்திகளையும் தொகுத்து உடனுக்குடன் உண்மையாக ஒலிபரப்பும் வானொலி வெரித்தாஸ் என்றால் மிகையாகாது.

இவ் 'உண்மை வானொலி' ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தி ஆறும் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி தனது முதல் ஒலிபரப்பை ஆரம்பித்தது. இந்த ஆண்டு மார்ச் 1ம் திகதி தனது அரிய பணிகளை அளித்து நூறு மாதங்களைக் கடந்து நூற்று ஓராவது மாதத்தில் காலடி எடுத்து வைக்கிறது. எழுபத்தி ஆறும் ஆண்டு ஆரம்பித்த இவ் ஒலிபரப்பு ஆரம்பத்தில் தமிழ் உட்பட ஓரிரு மொழிகளிலேயே தனது பணியைத் தொடங்கி நடாத்தி வந்தது.

இவ்வொலிபரப்பு இன்று கிட்டத்தட்ட பதினைந்து மொழிகளில் நடைபெறுகிறது. அவை; கொரியன் மொழி (Korean), சீனமொழி (Chinese), இந்தோனேசியன் மொழி (Indonesian), வியட்னாமிய மொழி (Vietnamese), யப்பான்மொழி (Japanese), சிங்கள மொழி (Sinhala), தமிழ் மொழி (Tamil), வங்காளி மொழி (Bengali), பாமஸ் (Burmese), தெலுங்கு மொழி (Telungu), ஆங்கில மொழி (English), கரின் மொழி (Karen), கைச்சின் மொழி (Kachin) ஆகும். இவ் ஒலிபரப்புகள் யாவும் காலை மாலை நேரங்களில் நடைபெறுகின்றன. குறிப்பாக தமிழ் ஒலிபரப்புகள் காலை 6மணி முதல் 6-25 மணி வரை 19.25 மீற்றர் சிற்றலை வரிசையிலும் (15.290, 11 730) நடைபெறுகிறது

இரவு ஒலிபரப்பு 31. 19 மீற்றர் சிற்றலை வரிசையில் (9.550 9.670, 15 215) நடைபெறுகிறது

இவ்வானொலியின் சிறப்பு அம்சங்களில் ஒன்று வெளிநாடுகளில் வாழும் தமிழருக்கு என வெரித்தாஸ் வழங்கும் 'தாயகச்செய்திகள்' என்ற விசேட செய்தி தொகுப்பாகும், இவ் விசேட செய்தி தொகுப்பு புதன்கிழமைகளில் இரவு ஒலிபரப்புகளிலும் வெள்ளிக்கிழமைகளில் காலை ஒலிபரப்புகளிலும் நடைபெறுகிறது முதல் கிழமைகளில் நடக்கும் செய்திகளை அளிக்கும் இச்செய்திகளில் இலங்கை, இந்தியா பற்றிய செய்திகள் மட்டுமே ஒலிபரப்பாகின்றன. இலங்கையில் கடந்த வாரங்களில் நடந்த அரசியல் செய்திகள், தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் சமூக பொது செய்திகளையும் தொகுத்து தருகிறது. இதே போல் இந்தியா பற்றிய செய்தியையும் தொகுத்து அளிக்கிறது.

வெள்ளிக்கிழமைகளில் இரவு ஒலிபரப்பில் 'நெஞ்சம் நெகிழ்கிறது' என்ற நிகழ்ச்சியையும் நடாத்துகிறது இதில் இவ்வானொலியில் தமிழ்நேயர்களின் கடிதங்களும் அவற்றிற்கான பதில்களும் இடம்பெறுகின்றன. இந்நிகழ்ச்சியில் பிரதான அறிவிப்பாளர் திரு. ஆரோக்கியசாமி பதில் அளிப்பார்.

உண்மையான செய்திகளை உடனுக்குடன் வழங்கிய இத் தமிழ்ப் பணிக்கு சில தடங்கல்களும் ஏற்பட்டதுண்டு. ஆனாலும் அது உண்மையை ஒலிபரப்ப தவறுவதில்லை. இவ்வரிசையில் சென்ற 83 யூலையில் நடந்த இனப்படுகொலைகளையும் அது ஆரம்பித்த விதம் தொடக்கம் பல பொது மக்களும் கொலை செய்யப்பட்டது, அப்பாவி மக்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

என். கடம்பகுமார்

★ நினைவு கூர்வோம்

# நெஞ்சம் மறக்காத கலைஞர் எஸ்தாக்கி

நாடறிந்த எமது நாட்டுக் கூத்துக் கலைஞர் கலைக்கவி நீ எஸ்தாக்கி ஒருவருடமாகி விட்டது! யாழ்ப்பாணத்தில் நாட்டுக் கூத்துக் கலையில் நாவாந்துறையின் பெரும் பணிக்கு இவரே காரணம் எனலாம். நாட்டுக் கூத்துகளை ஆக்கிப் பழக்கி அரங்கேற்றினார்.

ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து அவர் ஆற்றிய சேவையும், நாட்டுக் கூத்துக் கலையின் மீது அவருக்கு இருந்த நெடிங்கிய ஈடுபாடும் அவரை எல்லார் பக்கமும் ஈர்த்திழுத்தது.

வேதசாட்சிகள், ஞானசவுந்தரி, எஸ்தாக்கியார் போன்ற சமய நாடகங்களையும், கயிலை வன்னியன், கண்டியரசன், போன்ற வரலாற்று நாடகங்களையும் ஆக்கி அளித்து, ரசிகர்கள் இதயங்களைக் கொள்ளை கொண்டார். இவையெல்லாம் முழு இரவு நாட்டுக் கூத்துக்கள்.

சோழமன்னன், எல்லாளன், வெனிஸ் வர்த்தகன் போன்ற இவரது மூன்று மணிநேர நாடகங்கள் இவருக்குப் புகழைத் தேடிக்கொடுத்தன. நாட்டுக் கூத்து அண்ணாவியார்'' என்ற பட்டமும், 'கலைக்கவி' என்ற பட்டமும் இவரைக்கௌவிக்க வழங்கப்பட்ட பட்டங்களே!

நாட்டுக்கூத்துக் கலையோடு, தன்னைப்பெற்றெடுத்தநாவாந்துறைக்குத் தன்னாலானசேவையாற்றினார். பல்வேறு சமூகஸ்தாபனங்களில் அங்கம் வகித்து, அவர் ஆற்றியபணி அளப்பரியது.

கடந்த வருடம் இதேமாதம் 22ஆம் திகதி இவர் அமரத்துவம் அடைந்தபோது இவருக்கு வயது 67.

நாட்டுக்கூத்துக்கலை உயர உழைத்த இந்தக் கலைஞரை இலகுவாக மறந்து விடமுடியாது.

— ஷர்மினி

தவக்காலம்: இன்று 2வது ஞாயிறு

# மனித உளமாற்றத்தை கிறிஸ்து விரும்பும் காலம்

தவக்காலமானது வாழ்வில் தப்பான வழியில் சென்ற நாட்களை, செய்த தவறுகளை எண்ணி அவற்றிலிருந்து விடுபட ஒவ்வொருவனும் எடுக்க வேண்டிய தீர்மானத்தைப் பற்றி நினைவூட்டும் காலம்; வாழ்வில் இன்புற்றவன் அவ்வின்பத்தில் திளைத்திடும்வேளையில் வறுமையில் வாடிய தன் அயலவனைப்பற்றிச் சிந்தனையற்று வாழ்ந்திருந்தால் சற்று அயலவனைப்பற்றிச் சிந்திக்க அழைப்பு விடுக்கப்படும்காலம். இவ்வாறே பாவவாழ்க்கையில் ஈடுபட்டவன் தன் பாவத்தில் இருந்து விடுபட்டுப் புதிய வாழ்க்கை அமைக்க அவனுக்கு அழைப்பு விடுக்கப்படும்காலம். நமது தந்தையுடன் நமக்குள்ள உறவைப்பற்றி நம்மைச் சிந்திக்கவைக்கும் காலமாகவும் தவக்காலம் அமைகிறது. சகோதர சகோதரிகளிடையே நின்று நிலவவேண்டிய ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டுகிறது நாம் ஒருவருக்கொருவர் இணைந்த பொறுப்புள்ளவர்கள் என்பதை இத்தவக்காலம் உணரச்செய்கின்றது.

நமது சுயநலத்திலிருந்தும் குறுகியமனப்பான்மையிலிருந்தும், சிறுமைத்தனத்திலிருந்தும் நம்மை விடுவிக்கும் காலமும் கிறிஸ்துவைப்போன்று நாமும் பணிசெய்யவேண்டும் என்பதை நன்கு விளங்கிக்கொள்ளவும், உணரவும் செய்யும் காலமும் இத்தவக் காலமே.

நெடுந்தீவு
பி. ஜே. யோகராஜ்

திருச்சபையானது தன்விசுவாசிகள் இறைமக்கள் கடந்த காலத்தவறுகளை, பாவவாழ்க்கையை உணர்ந்து மனந்திருந்த, புதிய தீர்மானங்களுடன் புதிய வாழ்க்கை வாழ அழைக்கிறது. இதற்கென ஒவ்வொரு வருடமும் நாற்பது நாட்களைஒதுக்கியுள்ளது. இந்த நாற்பது நாட்களையும் நல்ல பயனுள்ள நாட்களாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் செயற்படுத்த வேண்டும் என்பதே திருச்சபையின் விருப்பமும் நோக்கமும் ஆகும்.

(8ம் பக்கம் பார்க்க)

## பூம்பனிமலர்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்ரயின் முகம் கோணலாகியது. வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தார்.

பியோன்கோபாலுவின்முகம் விகாரமடைந்தது. லாச்சியைத் திறந்து வெள்ளைக் காகிதத்தை எடுத்தத் தான் வழமையாக எழுதும் அன்புள்ள ஏமாந்த கணவனே' என்ற வாக்கியத்துடன் மொட்டைக் கடிதமொன்றுக்கு அத்திபாரம் போட்டான்!

இரண்டு நாட்கள் கூடவே குடியிருப்பில் இருந்தாள் கலா. ஒவ்வொருநாளும் பிரேமகாந்தன் கடற்கரை விடுதிக்கு அழைத்துச்சென்றான்.

மீண்டும் பிரேமகாந்தன் கோபத்தை மறந்து தன்னுடன் சிநேகிதமாய் நடந்துகொண்டதில் கலாவுக்குப் பூரணதிருப்தி. அந்தத்திருப்தியுடன் மன்னார்குடிக்குத் திரும்பிச் சென்றாள். அங்கு அவளுக்கு அலுவலகத்தில் பல வேலைகள் காத்திருந்தன.

''என்ன கலா, இரண்டுநாள் லீவு எடுத்து, நாலு நாட்கள் நின்றுவிட்டீரே... இங்கு நீர் இல்லாமல் நான் பட்டபாடு.''- ஏடி சிரித்தபடியே சிகரெட்டை எடுத்து வாயில் வைத்தார்

●

ஒரு வாரம் கழிந்தது. வேலை அதிகமிருந்த படியால் வீட்டு நினைவோ, வேறு நினைவுகளோ கலாவின் மனதில் எழவில்லை.

அன்று அவளின் பெயருக்கு ஒரு பதிவுத் தபால் வந்திருந்தது.

ஆவலுடன் தபாலைப் பிரித்தாள். அவளுடைய கணவன் சிவராசா விவாகரத்துக் கோரி தாக்கல் செய்திருந்த வழக்கின் நோட்டீஸ் அது! கலாவுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. ஏதோ நினைவுக்கு வர, ஓடிச் சென்று பிரேமகாந்தனோடு டிரங்கோல் ஒன்று எடுத்துக் கதைக்க முயன்றாள். பிரேமகாந்தன் அலுவலகத்தில் இல்லை என்ற பதிலே கிடைத்தது.

கலாவுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது.

இரண்டு நாள் லீவு எடுத்துக் கொண்டு அன்று நண் பகலே ஊருக்கு பஸ் ஏறினாள் அவள். அடுத்த நாள் காலை குளித்து விட்டு, மிக அலங்காரமாகத் தனது பழைய கந்தோருக்குப் புறப்பட்டாள். தன் தாயிடம் கூட, இப்படியான நீதிமன்ற நோட்டீஸ் வந்தது என்று கூறவில்லை.

''என்ன கலா திடீரென்று...''- மிஸிஸ் சிவசம்பு ஆர்வமுடன் விசாரித்தாள்.

''ஏ. டி. யைக்காணவேணும் ராஜேஸ்.''

''என்ன அவசரமடி?''

''ராஜேஸ், கொஞ்சம் பொறுமையாய்இரு! ஏடியைச் சந்தித்துவிட்டு வந்து எல்லாம் விபரமாய்ச் சொல்லுறன்.''

பரபரப்புடன் ஏடியின் அறை உள்ளே நுழைந்தாள்.

''குட்மோர்னிங் சேர்''

''ஹலோ...... வாரும் வாரும், என்ன திடீரென்று?—பிரேமகாந்தன் ஆச்சரியத்தில் அவளை எதிர்நோக்கினான். கலா ஒன்றும் பேசாது தனக்கு வந்த பதிவுத் தபாலை நீட்டினாள்.

மௌனமாக அதை வாங்கி ஆறுதலாக அதனைப் படித்த பிரேமகாந்தன் கடிதத்தை மேசைமேல் வைத்துவிட்டுக் கலாவை எதிர்நோக்கினான். கலா அவனின் முகத்தையே, எதையோ எதிர்பார்த்து நோக்கிக்கொண்டிருந்தாள்.

''உம்... என்ன செய்வதாக யோசனை...?''

''சேர்... நான்... நான் இதை எதிர்த்து வழக்காடப்போவதில்லை விவாகரத்துத்தான் எனக்கு இப்போ அவசியம் எனக்கு இப்போ வேண்டியது. முழுவிடுதலை நீங்களும் இதைத்தானே சேர் எதிர்பார்த்தீர்கள்..? நான் விவாகரத்துப் பெற்றால் நீங்களும் ஒருமுடிவு எடுக்கலாம் தானே''- ஆர்வத்துடன் பிரேமகாந்தனை எதிர்நோக்கினாள் அவள்.

சற்று நேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாகக் கலாவையே பார்த்துக் கொண்டிருந்தான் பிரேமகாந்தன். அந்த மௌனம் நீடித்த நாடிகள் கலாவைக் கொல்லாமல் கொன்றன

அவள் கதிரையின் நுனியில் அமர்ந்திருந்தாள்.

அவளை அணுகுவதிலும், அவனை அடைவதிலும் காட்டிய ஆர்வம் அவனின் வேகம் எல்லாம் இப்போது எங்கேயோ சென்று ஒளித்துக் கொண்டன.

கலா, நீர் நினைத்தபடி நடக்கமுடியாது. நான் குடும்பத்தோடு இன்னும் இரண்டு வாரத்தில் கனடாவுக்குப் போகின்றேன்! நீர் எதிர்பார்த்தபடி ... நான் ... கலா என்னை மன்னிக்க வேண்டும்... நான் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு இப்போதைக்கு வர முடியாது, நீர் யோசித்து. உமக்கேற்றமாதிரி நல்ல முடிவை எடும். நான் போகும் போது விலாசம் தந்து விட்டுப் போவன்தானே... ஏதாவது உதவி வேண்டுமென்றால் கூச்சப் படாமல் எழுதும் ...''

பிரேமகாந்தன் முகத்தில் ஒருவித சலனமுமின்றி, சொல்லிக் கொண்டேபோகின்றான்...

கலாவின் முகம் பயங்கரமாக மாறுகிறது!

பிரேமகாந்தன் ஏதேதோ சொல்லிக் கொண்டே இருக்கின்றான்.

கலாவின் காதுகளில் ஏதோ வார்த்தைகள் விழுந்துகொண்டேதான் இருக்கின்றன. எதையோ எதிர்பார்த்து வந்தவளுக்குத் தன் இளமையை, தன் கற்பை, தனது பொக்கிஷமெல்லாவற்றையும் கவர்ந்துவிட்டு,

சுயநலத்தின் முழுப்பிரதிநிதியாய் நிற்கும் பிரேமகாந்தன் ஏதோ பயங்கரமான உருவமாகக் காட்சி அளிக்கின்றான்.

கலாவின் கண்களிலிருந்து கங்கையெனக்கண்ணீர்பெருகுகின்றது.

கண்கள் மங்கல் அடைய காணும் பொருட்கள் யாவும் நீர்க்கோடுகளாய் மின்னுகின்றன.

[சம்பவங்கள். பெயர்கள் யாவும் கற்பனையே,]

முற்றும்

## வரலாற்றுப் பெருமைமிக்க உருத்திரபுரம் சிவாலயம் புனருத்தாரணம்



டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி

தமிழ் மன்னர் காலத்திற்கு முற்பட்டதாகவும் வரலாற்றுப் பெருமை மிக்கதும் புதுமைமிக்கதுமான உருத்திரபுரம் சிவாலயம் அந்நியர் ஆட்சியாலும் இயற்கையின் சீற்றத்தாலும் அழிந்து மண்ணோடு மண்ணாகியது.

பிற்காலத்தில் கிளிநொச்சிப் பகுதிகளில் நாடுகள் அழிந்துக் கழனிகளாக்கும் காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் உருத்திரபுரம் பெருங்குளத்தை புனரமைப்புச் செய்வதன் பொருட்டு பார்வையிடுவதற்கு நீர்ப்பாசன அதிபர் எஸ். ஆறுமுகம் அவர்கள் 1948ம் ஆண்டுக் காலத்தில் இங்கு வந்தார் காட்டுக்குள் ஆலயம் இருப்பதற்கான தடயங்களைக் கண்டு சைவப்பணி புரிந்த அன்பர்களுக்கு தெரியப்படுத்தி சிவயோகசுவாமிகளின் ஆசியுடனும் தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள், வேலாயுதம் சுவாமிகள் ஆகியோரின் ஆசியுடனும் ஆரம்ப நிதியுடனும் ஆலயம் புனரமைக்கப்பட்டது 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் திகதி குடமுழுக்கு விழா நடந்தேறியது. திருவருட்துணையால் அன்று காட்டு மத்தியில் இருந்த இவ்வாலயச் சூழலுக்கு சிவநகர் என்று நாமம் சூட்டப்பெற்றது.

வரலாற்றுப் பழமை மிக்க இச்சிவாலயத்தை காலத்திற்குக் காலம் பலபெரியார்களும் சைவ அபிமானிகளும்தரிசித்து ஆலய வளர்ச்சியிலும் பெரும் பங்கு கொண்டு வந்துள்ளனர்

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. ப. கணேசபிள்ளை அவர்களதும் ஏனைய சபை நிர்வாகிகளினதும் அயராத முயற்சியினால் இவ்வாலய புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதைப் பூர்த்திசெய்ய பெருந்தொகை பணம் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்குச் சைவ அபிமானிகள் பேருதவி வழங்கிச் சரித்திரச் சான்று பகரும் இவ்வாலய புனருத்தாரண வேலைகளைப் பூர்த்தி செய்ய உதவ முன்வரவேண்டும்.

## இவ்வாரம் உங்கள் பலன்

### இன்று

மாதம்- மாசி
திகதி- 20[3-3-1985]
கிழமை: ஞாயிறு
திதி- ஏகாதசி பிற்பகல் வரை
நக்ஷத்திரம்-புனர்பூசம் முன் இரவு வரை

**மேடம்**
கடமையாற்றும் இடத்தில் அமைதியுடன்செயலாற்றவும், குடும்பத்திலும் அடக்கம் வேண்டும்

**இடபம்**
இலாபகரமான தொழிலில் ஈடுபடுவோர் அதிக முதலீட்டைத்தவிர்க்கவும் பணமுடக்கத்திற்கும் இடமுண்டு, நிதானம் வேண்டும்.

**மிதுனம்**
இவ்வாரம் உணவு விடயத்தில் கவனம் வேண்டும் உடல் நலம் பாதிக்கப்படலாம். இனசன வரவுக்கும் இடம் உண்டு.

**கடகம்**
எதிர்பாராத சந்திப்பின் மூலம் பயனுள்ள விடயங்கள் நடைபெறலாம். சிநேகிதவழிமூலம் சிந்தனைக்கு விருந்து கிடைக்கலாம்.

**சிங்கம்**
எதிர்பார்த்த பணவரவு தடைப்படலாம். கருத்து மோதல்கள் தோன்றலாம். சஞ்சலமான செய்திக்கும் இடமுண்டு.

**கன்னி**
முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும் கூடப் பிறந்தவர்களினால் குறை கேட்க நேரும். எந்த விடயத்திலும் சிந்தித்துச்செயலாற்றவும்.

**துலாம்**
மாணவர் மனதில் விரக்தியைத் தவிர்க்கவும். மாதுரு வழியால் கவலைகள் தோன்றலாம், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் நிதானம்வேண்டும்.

**விருச்சிகம்**
அதிக நம்பிக்கைஆபத்தைத் தரும். புத்திரவழியாலும் தொல்லைகள் அதிகரிக்கும். எண்ணிய காரியம் தாமதமாகும்.

**தனுசு**
சத்துருக்கள் உங்கள் மத்தியில் சஞ்சலத்தை உண்டுபண்ணுவர். திடீர் பிரயாணங்களுக்கும் இடமேற்படும். பிரயாணத்தின் போது பொருளில் கவனம் வேண்டும்,

**மகரம்**
வாழ்க்கையிய் வசந்தம் குன்றும். எதிர்பார்த்த விடயத்தில் சோர்வுதென்படும். உங்கள் விடயத்தில் பிறர் தலையீடு தவிர்க்கப்படல் நன்று.

**கும்பம்**
இவ்வாரம் எவ்விடயத்திலும் அவதானம் வேண்டும். வீண்பழிக்கும் ஆளாகநேரும்.

**மீனம்**
பொது விவகாரங்களில் தலையிடுவது தவிர்க்கப்படல்வேண்டும். பிதாவழியாலும் கவலைகள் தோன்றும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## தவக்காலம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன் தன் பிழைகளை, பாவவாழ்க்கையை உணர்ந்து புதிய வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்ற அழைப்பு திருச்சபையில் மட்டுமல்ல பிற மதங்களிலும் உண்டு. இந்துக்கள் விரதம் இருந்து தம்உடலை வருத்தித் தம்பாவங்களுக்கு பரிகாரம் செய்வார்கள் இதே போன்று முஸ்லிம்கள் நோன்பு இருக்கின்றனர். எனவே கிறிஸ்தவர் மட்டும்தான் தவம் செய்கின்றோம் என்று கிறிஸ்தவர் எண்ணுவது தவறு.

திருச்சபையானது தவக்காலத்துத் திருவழிபாடுகள் மூலம் கிறிஸ்து மீது கொண்ட வெற்றியையும் எமக்குக் கிடைத்த மீட்பையும் வெளிப்படுத்துகின்றது. உள்ளார்ந்த அர்த்தமில்லாத வெளிச்செய்கைகள் மூலமாகவோ அல்லது திருவழிபாடுகள் மூலமாகவோ தவக்காலத்தின் முழுமையான அர்த்தத்தை உணரமுடியாது. தவக்காலத்தில் முக்கியமாக உளமாற்றம்தான் கிறிஸ்தவனுக்கு வேண்டியதாகின்றது. கிறிஸ்து எமது வாழ்க்கைச்சக்கரம் சுழலும் அச்சாணியென்றால், எமது நோக்கில் எமது கண்ணோட்டங்களில் மாறுதல்வேண்டும். நான் பாவியென்று ஏற்றுக்கொள்வதோடு மட்டும் நின்றுவிடாது மன்னிப்பின் தேவன் நீட்டும் அன்புக்கரத்தை உடைந்த உள்ளத்தோடு பற்றிக்கொள்ளவும் வேண்டும்.

யோவேல் ஆகமத்தில் ''உங்கள் உடைகளைக் கிழிக்கவேண்டாம்; உங்கள் உள்ளங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்'' என்றகூற்றுமிகவும் பொருத்தமானதாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் எம்முடைய சுயநலமுள்ள மனப்போக்கினால் இறைவனிடமிருந்தும், அயலானிடமிருந்தும் பிரிந்து வாழ்கின்றோம் எம்முடைய சமுதாயத்திலே நாம் பல கொடுமைகளைச் செய்து கொண்டு கிறிஸ்தவர்கள் என்ற போலிப் பெருமையோடு வாழ்வதை நாம் மறுக்கமுடியாது. எம்முடைய இத்தகைய மனநிலைகளில் மாற்றத்தைத்தான் இறைவன் இத்தவக்காலத்தில் வேண்டுகின்றான்; எனவே எமது வாழ்வின் அவலநிலையை மாற்ற இறைவனின் அருளோடு இருளின் செய்கைகளின்றும் விடுபட்டு புதிய உள்ளத்தோடு வாழத் தொடங்க இத்தவக்காலத்தில் முயலுவோமாக.

## வெரித்தாஸ்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது கடைசியாக எல்லாவற்றையும் இழந்த இலங்கைத்தமிழர்கள் அகதிகளாக சொந்த ஊர்களுக்கு ''சிதம்பரம்'' கப்பலில் வந்து இறங்கியது வரையிலான செய்திகளை ஒலிபரப்பியது. இதனால் இலங்கை அரசாங்கம் இந்நாட்டுச் செய்திகளை ஒலிபரப்பக் கூடாது. என்று வெரித்தாஸின் இலங்கை நிருபரைக் கேட்டுக் கொண்ட அதேவேளை வெரித்தாஸுடன் நேரடியாக தொடர்பு கொண்டு தனது கண்டனத்தையும் தெரிவித்தது.

அதன்பின் சிலமாதங்களால் மீண்டும் இலங்கை பற்றிய செய்திகளை வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. இதுபோன்ற பல இடர்களையும் சந்திக்க நேர்ந்த அவ்வேளையிலும்தமிழ் நேயர்களின் ஆதரவும் துணிவும் கிடைத்தபடியால்களைத்துவிடாது தொடர்ந்து துணிவுடன் பணிபுரிந்து இன்று தனது நூற்று ஒராவது மாதத்தில் காலடி எடுத்துவைத்துள்ளது. அக்காலடிகள் பலமாதங்களாகவும் பலவருடங்களாகவும் தொடர்ந்து செல்ல வேண்டுமென்பதே உண்மையை அறிய விரும்பும் தமிழ் வானொலி நேயர்களின் பேரவாவாகும்.

# ஒலிவர் ருவிஸ்ற் தமிழில் 'பேனு'

## திருடனின்பிடியில் ஒலிவர்

இருவரும் பில்சைக்ஸ் வீட்டைச் சென்றடைந்தனர். சைக்ஸ் வரவேற்ருன். ஒலிவர் கூச்சல் போடாமல் வந்தான் என்பதை அறிந்து சைக்ஸ் மகிழ்ச்சி தெரிவித்தான் பிறகு தனது கைத் துப்பாக்கியை எடுத்து தோட்டாக்களைநிரப்பி அதனை ஒலிவரின் கழுத்தின் அருகில் நீட்டிப் பிடித்தான். ''நீ என்னுடன் வெளியில் போகும்போது நான் கேட்டால் அல்லாமல் ஒரு வார்த்தையாகிலும் பேசினுயென்ருல் இந்தத் துப்பாக்கியிலுள்ள குண்டுகள் முழுதும் உன் தலைக்குள்தான் இருக்கும் ஆகவே அனுமதியில்லாமல் பேசுவதற்கு நினைப்பதாயிருந்தால் இப்போதே உன் பிரார்த்தனையை முடித்துக்கொள்'' என்று உறுமினுன்.

பின்னர் எல்லோருமாக மாலை உணவை அருந்தியபின் சைக்ஸ் குடித்துவிட்டு கட்டிலில் விழுந்து படுத்தான். ஒலிவர் நிலத்தில் கிடந்த ஒரு மெத்தையில் சரிந்து கொண்டான். இவர்களைக் குறித்த நேரத்தில் எழுப்பிவிடுவதற்காக நான்ஸி கணப்பின் அருகில் அமர்ந்து நெருப்பைக் கிளறிக்கொண்டிருந்தாள். விடியற்காலையில் எழுந்து பார்த்தபோது மேசையில் தேநீர் ஆயத்தாக இருந்தது. நான்ஸி காலை உணவைத் தயாரித்துக்கொண்டிருந்தாள். வெளியில் கடும்மழை கொட்டிக்கொண்டிருந்தது. ஒலிவரை எழுந்து வெளியே போகத் தயாராகும்படி சைக்ஸ் உத்தரவு போட்டான். ''நேரமாகிவிட்டது; ஆயத்தமாகு இல்லையென்ருல் காலைச் சாப்பாடு இல்லாமற்போய்விடும்'' என்று எச்சரித்தான். ஒலிவர் விரைவாக காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆயத்தமாஞன். நான்ஸி ஒரு கைலேஞ்சியை அவன்கழுத்தில் கட்டிக் கொள்ளக் கொடுத்தாள். சைக்ஸ் ஏதேதோ சாமான்களைத் தன் கோட்பாக்கெட்டில் திணித்துக் கொண்டு ஒலிவரைக் கையில் பிடித்துக் கொண்டு புறப்பட்டான்.

கடும்மழைபெய்துஓய்ந்திருந்த்து. வாய்க்கால்கள் நிரம்பி வழிந்தோடிக் கொண்டிருந்தன. அவர்கள் சென்ற வீதியில் வீடுகள் யாவும் மூடிக்கிடந்தன.

பேத்நல்கிறீன் என்ற வீதியில் அவர்கள் திரும்பியபோது காலைவேளை நன்ருக பிரகாசமுற்றிருந்து. சில நாட்டுப்புற வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன. மெதுவாக சனநடமாட்டம் அதிகரித்தது. இருவரும் பல வீதிகள். ஒழுங்கைகளைக் கடந்து ஹொல்போன் என்ற இடத்தில் ஹொஸியர் ஒழுங்கையை அடைந்தபோது அங்கிருந்த அர்ச். அன்று தேவாலயத்தின் கோபுரத்தில் காணப்பட்ட மணிக்கூட்டைப் பார்த்துவிட்டு சைக்ஸ் கூறினுன். ''பையா கிட்டத்தட்ட ஏழு மணியாகிவிட்டது. உன் சோம்பேறிக் கால்களை வேகமாக எடுத்துவைத்து நட'' என்று, இப்படிக் கூறியபோது ஒலிவரின் கையை ஒருதரம் மடக்கி அசைத்தான் சைக்ஸ். வேகமாக நடக்கும் அவனேடு போட்டிபோடுவது போல் ஒலிவர் ஓட்டமும் நடையுமாகப் பின்தொடர்ந்தான்.

ஹைட்பார்க் முடுக்கைக் கடந்து கென்சிங்டன் வீதிக்கு வந்தார்கள். சைக்ஸ் தனது நடையைத் தளர்த்தினுன் அந்த வழியாகச் சென்ற ஒரு குதிரை வண்டிக்காரனிடம் ஐல்வேர்த் வரைக்கும் தங்களை ஏற்றிச் செல்லமுடியுமா என்று பவ்வியமாககேட்டான். அவன் இசையவே இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள் ஒரு நகரில் இறங்கி அங்குமிங்கு மாகத்திரிந்து நாளைக்கடத்தியபின் மாலையில் அதே நகருக்குத்திரும்பி வந்தார்கள். ஒரு பழைய போசன சாலைக்குள் நுழைந்து சாப்பிட்டபின் அங்கேயே வெகுநேரம் தங்கியிருந்தார்கள். அங்குள்ள எவரும் இவர்களைப்பற்றி அதிகம் அக்கறைக்காட்டிக்கொள்ளவில்லை சைக்ஸ் பாக்கட்டிலிருந்த பைப்பை எடுத்து புகையிலையை மீண்டும் மீண்டும் நிரப்பியதைபுகைத்துக் கொண்டிருந்தான். நடந்தகளைப்பினுலும் அதிகாலையிலேயே எழுந்திருந்ததினுலும் ஒலிவர் இருந்த இடத்திலேயே நித்திரையாய்ப் போனுன். இரவு வெகு நேரத்தின் பின் ஒலிவரை எழுப்பி ஒருவண்டியைப்பேசி அமர்த்திக்கொண்டு புறப்பட்டான் சைக்ஸ். வெகுதூரம் சென்றபின் வண்டியை நிறுத்தி இறங்கி நடந்தார்கள். இறுதியில் தனித்துப்போன பாழடைந்த வீட்டின் முன் இருவரும் நின்றனர். ஒலிவரைக் கையில் பிடித்தபடி அந்த வீட்டுக்குள் நுழைந்தான் சைக்ஸ்.

(தொடரும்)

---

## போக்கு வரத்து சீர்குலைந்த நிலையில் கல்லுண்டாய் வீதி

[யாழ்ப்பாணம்]

கல்லுண்டாய் பாலத்திற்கு அப்பலுள்ள மதகு ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் அதிகாலை இவ்வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளால் 13 பாரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வீதியால் வாகனங்கள் எதுவும் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (மா)

---

## கச்சதீவு உற்சவம் ரத்து

[கொழும்பு]

இம்மாதம் நடைபெறவிருந்த கச்சதீவு அந்தோனியார் வருடாந்த உற்சவத்தை இலங்கை அரசு ரத்து செய்துள்ளது. யாழ்ப்பான மாவட்டத்தின் தற்போதய நிலையைக் கருதியே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அரசு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

---


நீகல் மினி
தினசரி 10-15, 1-30
விஜயகாந் - ரேவதி
நடிக்கும்
வைதேகி
காத்திருந்தாள்

றீகல்
தினசரி 10-30, 2-00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி, கே.ஆர்.விஜயா,
நடித்த
கிரஹப்பிரவேசம்


வெலிங்டன்
(யாழ். நகர்)
10-15, 12-15, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா
பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

மனேகரா மினி
இன்று தொடக்கம்
(2-3-85)
நாளை நமதே


## முதலாண்டு நினைவஞ்சலி

அமரர்
ஆறுமுகம்
கந்தையா
அவர்கள்

(குருவிச்
சட்டம்பியார்)



தோற்றம்:
1894-06-15

மறைவு:
1984-02-13

நல்லோர் போற்றும் தொல்பதியாகிய நெடுந்தீவில் சித்திவிநாயகனும் செவ்வேல்முருகனும் கோயில்கொண்டெழுந்தருளி இருக்கும் மேற்குபகுதியில் சுப்பிரமணியம் ஆறுமுகத்திற்கும் வைத்தியநாதர் நாகாத்தைப் பிள்ளைக்கும் அருந்தவப்புதல்வனுகப் பிறந்தவர் அமரர் கந்தையா அதிபர் அவர்கள். அவர்களின் அருமைச் சகோதரர்கள் ஒன்பதின்மர். கல்வியாலுயர்ந்து கட்டழகனை வளர்நதுவந்த கந்தையா ஆசிரியர் சிவப்பேறெய்திய முத்தப்பிள்ளை என்பவரைத் திருமணம் செய்து புதல்வர் மூவரையும், பெண்கள் இருவரையும் புத்திரராகப்பெற்றவர். அன்னரது வாழ்க்கை இளந்தலைமுறையினருக்கு ஒருவழிகாட்டி. நற்சிந்தனையும், நற்சொல்லும் நற்செயலும் பொருந்த ஆசிரியராய், அதிபராய்த் தொண்டாற்றியவர் அவர், அவரால் உருவாக்கப்பட்ட புத்திஜீவிகள் பலர் இப்பொழுதும் வாழ்ந்துவருகின்றனர் கல்விப்பணியும் கடவுட்பணியும் அவரத இருகண்கள் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

மக்கள், மருமக்கள், பேரர்கள், பூட்டர்கள், சகோதரர்கள், சகோதரிகள்.

ஊர்காவற்றுறை, 1985-3-3. 2099


Jaffna College
Technical Institute Vaddukoddai

NEW ADMISSION:- E. C. E [Lond] Part I - 1986

Application for admission to follow full time course of study, preparing for Engineering Council Examination (Lond) Part I - May 1986 are accepted till 15th March, 1985.

Minimum 2 G. C. E. (A/L) passes in Mathematics and Physics are required.

Application form and Prospectus Rs. 25/- available at the Office. Course fee Rs. 3000/-

Classes commence on 18-3-1985.

DIRECTOR

2091

பெற்ரு எசன்ஸ் சப்ளையேர்ஸ்
(Pettah Essence Suppliers)

★ பேக்கரி தயாரிப்புகள்,
★ பிஸ்கற், ரொபி, இனிப்பு,
★ குளிர்பானம், ஐஸ்கிரீம்,
சிற்றுண்டி வகைகளுக்கான

சகலவிதமான எசன்ஸ், கலர் பவுடர்,
கேக் தயாரிப்புக்கு தேவையான
சகல பொருட்களுக்கும்

ஊதுபத்தி- சாம்பிராணி- விளைவுசூடம்-
ரல்கம் பவுடர்- வாசனை திரவிய எண்ணை-
ஓடிக்கொலோன்- ஆகியவை தயாரிப்பதற்கான
உற்பத்திப்பொருட்களுக்கும்

ஏனைய இதர

பேப்பர்வகை, பொக்ஸ்போட், காட்போட், ஆற்போட், நியூஸ் பேப்பர், ஓயில் பேப்பர், பிரவுண் பேப்பர், ரிசுபேப்பர். சலபின், எல்லா வகையான பொலித்தீன் வகைகளுக்கும்-

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற
ஸ்தாபனத்திற்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

223, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(Power House Road) (Jaffna)

சுத்தமான தேங்காய் எண்ணை

எம்மிடம் தரமான சுத்தமான தேங்காய் எண்ணை நிதானமான விலையில் மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ கிருஷ்ணு இன்டஸ்றீஸ்
(S. K. I.)

யூனிற் 7-8, கைத்தொழில் பேட்டை,
அச்சுவேலி, தொலைபேசி: 226.

2087

பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம்

பகிரங்க இறுதி ஆண்டு ஏல விற்பனை

உடை தயாரிப்பு நிலைய உற்பத்திப்பொருட்கள்
சேட்ஸ் அன் சோட்ஸ்
சூட்டிங் அன் சேட்டிங்
சாறி அன் வேட்டி

என்பனவும் வேறு உற்பத்திப் பொருட்களும் 04/03/85 திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை (08/03/85) வரை ஒவ்வொரு நாளும் காலை 6-00 மணி தொடக்கம் முற்பகல் 12-00 மணிவரை நடைபெறும் மொத்தமாகக்கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
பண்டத்தரிப்பு.

02/03/1985

2095

விடுதலைப்புலிகள்

# 16 போராளிகளுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கொக்கிளாய் ராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது பலியான தமிழீழ விடுதலைப் புலிகளின் 16 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தி அவ்வியத்தால பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

போர் முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு - வந்ததில்லை என்ற தலைப்பில் 'ராணுவமுகாம் தாக்குதல்' பற்றி விபரமாக இப் பிரசுரத்தில குறிப்பிடப்பட்டுள்ளது.

''அரசானது தமிழீழ மக்களை தம் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கும் நோக்குடன் சிங்கள சமூகத்திலிருந்து விடுபட்ட சிலருக்கு ஆயுதப்பயிற்சி அளித்தும் ஆயுதமயப்படுத்தியும் தமிழீழப் பிரதேசங்களில் குடியமர்த்தும் நோக்குடனும் ராணுவ முகாம்களை எங்கிலும் விஸ்தரித்து வருகின்றது.

''இதன் தொடராக ஆயுதப்பயிற்சியளிக்கப்பட்ட குடியேற்றத்திற்கு முன்னேற்பாடாக கொக்கிளாயில் நவீனரக ராணுவ ஆயுதத் தளபாடங்களுடன் பலப்படுத்தப்பட்ட ராணுவமுகாமொன்று அமைக்கப்பட்டது. இந்த ராணுவ முகாமின் அமைவால் அப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ்மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதோடு அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு தம்சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறன அரசின் சகலவகையான அடக்குமுறைகளை தடுக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பு தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் அனைத்து விடுதலை அமைப்புகட்குமுண்டு

''இவ்வகையில் புதியதோர் உத்வேகத்தை கொடுக்கும் வகையில் 13-02-85ல் ராணுவ முகாம் ஒன்று [கொக்கிளாய்] முதற்தடவையாக வெற்றிகரமாகதாக்கப்பட்டது. கடும் விமானத் தாக்குதலிற்கு மத்தியிலும் சுமார் 5 மணித்தியாலங்களாக எமது போராளிகட்கும் ராணுவத்தினர்க்குமிடையே நடைபெற்ற கடும் சமரில் ராணுவ தரப்பில் நூற்றியாறு சிப்பாய்கள் கொல்லப்பட்டு இருபத்தைந்து பேர்கள் படுகாயமுற்றனர். இதேவேளை கொக்கிளாய் ராணுவமுகாமிற்குதவியாக முல்லைத்தீவிலிருந்து அனுப்பப்பட்ட ராணுவ வண்டித் தொடர்மீது ஏனையஎமது போராளிகள் நடாத்திய தாக்குதலில் மேலும்இருபத்யெட்டு ராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ராணுவ வாகனங்கள் சேதமடைந்த நிலையில் ஏனையோர் பின் வாங்கினர். இதன் பிரதிபலிப்பாக அரசியல் ரீதியான சில அனுகூலங்கள் இம்மண் பெற்றிருப்பது. எமது முழு வெற்றியையே காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்த சுவரொட்டிகளும் நேற்று காணப்பட்டன.

### உரிமை கோரி...

கடந்த பெப்ரவரி 22ம்திகதி புளியங்குளத்தில் நடைபெற்ற தாக்குதலில்போது ஜீப்வண்டியில் சென்ற பொலிஸ் அதிரடிப்படையைச்சேர்ந்தபொறுப்பதிகாரி உட்பட ஏழு அதிரடிப்படை பொலிசார் கொல்லப்பட்டதகுற்ம் தாமே பொறுப்பு என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

# இளவரசர் சார்ள்ஸ் இரத்தம் வழங்கினர்

(லண்டன்)

முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் நேற்று இரத்தம் வழங்கினர். முதல் தடவை யாழ். அரசவம்சத்திலிருந்து இரத்தம் வழங்கப்பட்டது. இதுவே முதல் தடவையாகும். சதாரண பிரஜையொருவருக்கு இவ் இரத்தம் ஐந்து நாட்களில் ஏற்றப்படும்.

நேற்றய லண்டன் பத்திரிகைகள் இதனை முதல் கொட்டை எழுத்து தலைப்புச் செய்தியாக வெளியிட்டன.

இளவரசரின் இரத்தத்தில் ஏதாவது நோய் இருக்கலாமென்றும் சில பத்திரிகைகள் கிண்டல் செய்திருந்தன.

## மயானத்தில் இரு சடலங்கள்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள விளாவெளி மயானத்தில் இருசடலங்கள் கிடந்தன. மயானத்தில் வைத்துக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## குருநகர் தபால் நிலையத்தில் பென்ஷன்

(யாழ்ப்பாணம்)

மறு அறிவித்தல் வரை இலங்கை வங்கியின் குருநகர் கிளை இயங்கமாட்டாதென்றும் அக்கிளையில் பென்சன் பெறுவோருக்கு வழங்கப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை தபால் நிலையங்களில்ஒய்வூதியம் பெறுவோருக்கு குருநகர் தபால் நிலைய கிளையில் வைத்து ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. (மா)

## மினிபஸ் கடத்தப்பட்டது

[சுன்னாகம்]

மாதகல் யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மினிபஸ் ஒன்று நேற்று காலை பண்டத்தரிப்பில் வைத்து இனம்தெரியாத சிலரால் கடத்திச்செல்லப்பட்டது. கடத்தியவர்கள் 1 மணித்தியாலயத்தில் மீண்டும் வாகனத்தை கொண்டு வந்து தருவோம் என்று கூறிச்சென்றனராம். வாகனம் நேற்று மாலை வரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

## யாழ். கிளிநொச்சி பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே சகல போக்குவரத்துச் சேவைகளும் இரணைமடு - வட்டக்கச்சி பரந்தன் ஊடாக நேற்று நடைபெற்றது

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து பிரதான பாதை பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## இந்த அதிபர்கள் கவனத்துக்கு....

(யாழ்ப்பாணம்)

மார்ச்சு 23ம் திகதிஇலங்கை வங்கி குருநகர் கிளையில் ஒப்படைக்கப்பட்ட காசோலைஊ இற்றைவரை மீளப்பெறுத பாடசாலை அதிபர்கள் அனைவரையும் நாளை நாலாம் திகதி காலை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி அலுவலக முகாமையாளரை நேரில் சென்று சந்திக்கும்வண்ணம் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க துணைப் பொதுச் செயலாளர் த பஞ்சலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 'ஈழநாடு' நிறுவனத்தில் செங்கை ஆழியான் நூல்

(யாழ்ப்பாணம்)

'ஈழநாடு' நிறுவனமும்யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்தும் இலக்கிய அரங்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 'ஈழநாடு' அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

இவ் அரங்கில் முதல் நிகழ்ச்சியாக யாழ் இலக்கிய வட்டம் 'ஈழநாடு' நிறுவனத்துடன் இணைந்து நடாத்திய இரசிகமணி கனக.செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

டொமினிக்ஜீவா, செம்பியன் செல்வன் ஆகியோர் பரிசளிப்புரையாற்றுவார்கள். திருமதி கனக.செந்திநாதன் பரிசு வழங்குவார்.

'ஈழநாடு' வெளியீடாக வெளிவரவிருக்கும் செங்கை ஆழியானின் ''கடல்கோட்டை நூல் வெளியீடு அடுத்த நிகழ்ச்சியாக அமையும். மாவை ஆதீனம் சு.து ஷண்முகநாதக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார். சிற்பி,கலாநிதி அ சண்முகதாஸ், கலாநிதி சி க சிற்றம்பலம், கலைப்பேரரசு ஏ ரி பொன்னுத்துரை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். நூலின் முதற் பிரதியை சிவநெறிக்காவலர் திரு.க.கனகராசா பெறுவார்.

ஈழநாடு நிர்வாக ஆசிரியர் திரு ந.சபாரத்தினம் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்

# உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி விநியோகம்

[மானிப்பாய்]

''மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் பிரதம நிர்வாகியான பொது முகாமையாளர் எதுவித தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்களை விநியோகம் செய்துவருகிறர். பழைய தலைவர் முதலியார் தனது அறிக்கையில் குறிப்பிட்டபடி, காரியாலயத்தில் மாலை 3-30 மணி வரை இருந்தார். ஆனல் அவரை மா விநியோகம் செய்யும்படி பணிக்காமல். தலைவர் தனது இஷ்டப்படி மாவை விநியோகம்செய்தார். இது உப விதிகளுக்கு முரணனது.''

இவ்வாறு மானிப்பாய் கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சு. தர்மசீலன் அறிக்கையொன்றில் தெரிவித்துளளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''கிளை முகாமையாளர் மாற்றத்தில், தலைவர் உட்பட இயக்குநர் சபையினர் எடுத்த ஏகமனதான தீர்மானத்தையே பொது முகாமையாளர் நடைமுறைப்படுத்தியுள்ளார். புதிய தலைவர் ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தருணத்தில், முன்னுள் தலைவர் இயக்குநர்களையும். பொது முகாமையாளரையும் தவருகப் பொதுமக்களுக்குக் காட்ட முற்படுவது வியப்பாகவுள்ளது''.

## இன்று

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச தொழிற் சங்கத்தின் கூட்டுக் குழுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை லங்கா தொழிற்சங்க சம்மேளனங்களின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (மா)

## கிளிநொச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''இலங்கையின் பயங்கரவாதப் பிரச்னை தொடர்பாக வெளிநாட்டுக் செய்தித் தாபனங்கள் வெளியிடும் பொய்யான தகவல்களில் இதுவும் ஒன்ருகும்

இச்சம்பவத்தில் நான்கு படை வீரர்கள் காயமடைந்ததைத் தவிர வேறெந்தப் படைவீரர்களும் பாதிக்கப்படவில்லை என்றும் ராஜாங்க அமைச்சுத் தெரிவித்துள்ளது..

## நேற்றுவரை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தமிழ் அகதிகள் வந்தடைந்துளளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அகதிகளில் பெரும்பாலானேர் பேசாலை, மன்னர் ஆகியஇடங்களைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்பட்டது.

## பாதுகாப்புத்தேடி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளதாகவும் கட்டிடம் பெரும்பகுதி தகர்க்கப்படவில்லை எனவும் தெரியவந்தது.

ரெக்கட் றேஞ்சர் பாவித்து கட்டிடத்தை தகர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படுகிறது. குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கி வேட்டுக்கள் காலை ஆறு மணிவரை கேட்டவண்ணம் இருந்தன.

காலை சுமார் 7 மணிவரை ராணுவம் ஆனையிறவில் இருந்தோ மற்றும் இடங்களில் இருந்தோ பொலிஸ் நிலையத்தை வந்தடையவில்லை பரந்தன், முருகண்டிப் பக்கமாகவும் குண்டுச் சத்தங்கள் இரவு முழுவதும் கேட்டவண்ணமிருந்தது,

### கவச வாகனத்தில்

கவச வாகனமொன்றில் சென்றேரே பொலிஸ் நிலையத்தைத் தாக்கினர். காலை 7 மணியளவில் நகரின் மேலாக இரண்டுஹெலிகப்டர்களும்ஒரு விமானமும் பறந்துசென்றன தாழ்வாகப் பறந்த ஹெலிகப்டரில் இருந்து குண்டுநிலத்தை நோக்கி வீசப்பட்டது. துப்பாக்கியால் சுடப்பட்டது இதிலும் பொது மக்கள் காயமடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

### அபாய அழைப்பு

தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை பொலிஸ் நிலையத்திலிருந்து அபாய அழைப்புமணிச் சத்தம் கேட்டது.

கிளிநொச்சி நகரமும் அடுத்துள்ள கிராமங்களும் தொடர்ந்து ஸ்தம்பித நிலையில் உள்ளன. ஜி.சி ஈ விசேட பரீட்சையும் நடைபெறவில்லை.

நகரவாசிகளும் திருநகர், கணேசபுரம், பரவிப்பாஞ்சான் பகுதி மக்களும் குடிபெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். பொலிஸ் ராணுவ கூட்டுமுகாம் தற்போது பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது கண்டி வீதியில் பொலிஸ்நிலைய முன்பாக உள்ள பாதையில் வாகனப் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

நகரில் ராணுவ நடமாட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையப்பக்கமாக உள்ள கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது. கிளிநொச்சியில் உணவுப் பொருட்களுக்கு (பாண் உட்பட) தட்டுப்பாடு நிலவும் இதேவேளை நகரமும் அடுத்துள்ள கிராமமும் மயான அமைதி நிலவுகிறது.

## மூன்று மதகுகள் தகர்ப்பு

[கொழும்பு]

கிளிநொச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடையிலுள்ள பிரதான பாதையில் மூன்று மதகுகளை பயங்கரவாதிகள் நேற்று குண்டு வைத்து தகத்துள்ளார்கள் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடபகுதிக்கு செல்லும் ரயில் பாதைகளையும் இவர்கள் தகர்த்துள்ளார்கள்! இதனல் வடபகுதிக்கான போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டுள்ளன என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## இலங்கை வீரர்களுக்கு தலையில் பலத்த காயம்!

[சிட்னி]

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களில் இருவர் தலையில் கிரிக்கெட் பந்து பட்டதினல் பலத்த காயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை உலகக் கிண்ணத்துக்கான மே. இந்திய - இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் பந்தயம் சிட்னியில் இடம் பெற்றது.

இப்பந்தயத்தின் போதே இலங்கை வீரர்களில் இருவர் தலையில் பந்தடியினல் காயமடைந்தனர்.

இந்தப் பந்தயத்தில் இலங்கை தோல்வியடைந்தது தெரிந்ததே. (கி)

## மல்லாகத்தில் சூடு, கொள்ளை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து இப் பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது.

(தணிக்கை) வாகனங்களில் வந்தவர்கள் (தணிக்கை)...துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தின் தனியார் விற்பனவு நிலையமொன்றிலிருந்து ரொக்கப் பணமும் சிகரெட் பைக்கட்டுகளும் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## எம். ஜி. ஆர்.

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

தினம் மாலை ராஜ்பவனில் ஆளுநர் திரு. எஸ். எம். குரானவைச் சந்தித்து புதியஅமைச்சர்களுக்கான பட்டியலைக் கையளித்தார்.

முன்னுள் சபாநாயகர் திரு. கே. ராஜாராம், முன்னுள் அமைச்சர் திரு. வீ வீராசாமி ஆகியோருடன் புதிதாக திரு. வீ. வீ சாமிநாதன், திரு. ஆனூர் ஜெகதீசன், திரு ஏ. அருணசலம், திரு. டி இராமசாமி, திரு டி. நல்லூரன் ஆகியோரே புதிய அமைச்சரவையில் இடம்பெறுபவர்களாவர்.

இவர்களுடன் சேர்த்துதமிழ்நாடு அமைச்சரவையில் மொத்தமாக 24 அமைச்சர்கள் இடம்பெறுவர். புதிய அமைச்சர்களுக்கான பதவிப் பிரமாணம் இன்று நடைபெறும், [ரா]

## அனுமதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் முதன்முறையாக க. பொ. த. உயர்தர வகுப்பில் வர்த்தக பாடம் போதிக்க கல்விப்பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் அனுமதி வழங்கியுள்ளார்.

பிரஸ்தாப கல்லூரி அதிபர் செல்வி இராசமணி சின்னத்தம்பியும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கல்விப்பணிப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே உயர்தர வகுப்பில் வர்த்தகபாடம் போதிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eeelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tlephone number 22389 - 24126.